வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 23.09.2023 சனிக்கிழமை | இதழ் : 287 | பக்கங்கள் : 16






கட்டுவன் முத்துமாரி அம்மன் ஆலயத்தில்

## 33 வருடங்களின் பின்னர் வழிபாட்டுக்கு அனுமதி!

யாழ்ப்பாணம், செப். 23

உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள கட்டுவன் காசியம்பாள் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் பூசை - வழிபாடு செய்வதற்கு ஆலயத்தினருக்கு நேற்று படையினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

1990ஆம் ஆண்டுக்கு பின்னர் முதன்முறையாக

11

## வவுனியா விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

வவுனியா, செப். 23


தரிப்பிடத்தில் நின்ற பேருந்தை முந்திச் செல்ல முயன்ற பட்டா வாகனம் எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியா பறனாட்டங்கல் சந்தியில் இடம்பெற்ற இந்த விபத்தில் ஓமந்தையில் வெதுப்பகம் ஒன்றை நடத்தி வரும் சிவசேகரம் தினேசன் என்பவரே உயிரிழந்தார்.(ஐ)

பதின்மூன்றையே தட்டிக்கழித்தால்

# திரும்பவும் ஒரு பிரபாகரனை கூட்டி வரவேண்டியிருக்கும்!

## விக்னேஸ்வரன் எம். பி. சொல்கிறார்



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 23

“13ஆம் திருத்தச் சட்டம் (அதிகாரம்) குறைந்த ஒன்று. இதே கிடைக்கவில்லை - அதுவும் இந்தியாவின் அனுசரணையின் பேரில் கிடைத்ததைக்கூட அவர்கள் (அரசாங்கங்கள்) தட்டிக் கழித்து கொண்டு வருவார்களேயானால் திரும்பவும் பிரபாகரன் ஒருவரைக் கூட்டிக் கொண்டு வரவேண்டியது தான். வேறு வழி இல்லை.”, - இப்படி தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன்.

டான் தமிழ் ஒளி தொலைக்காட்சியின் ஸ்பொட்லைற் நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரவித்தார். 13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

“தற்போதிருக்கும் 13ஆவது திருத்தச் சட்டம் இந்தியாவின் அனுசரணையுடன் வந்தது. இப்போது அதை விடுத்து புதிய அரசியல் யாப்புக்கு சென்றால் அதில் இந்தியாவின் அனுசரணை இருக்காது. ஏனெனில், அதற்கும் இந்தியாவுக்கும் தொடர்பில்லை. இப்போது இருக்கும் 13இற்கும் இந்தியாவுக்கும் தொடர்பு உள்ளது. ஆகவேதான் நாங்கள் இந்தியாவின் அனுசரணையை - அதன் நடவடிக்கையை

11

## மனித உரிமைகள் மீறல் விவகாரத்தில் இலங்கையை பொறுப்புக்கூற செய்க!

### அமெரிக்க காங்கிரஸ் வலியுறுத்து

கொழும்பு, செப். 23

சர்வதேச மனித உரிமை சட்டங்கள் மீறப்பட்டமைக்கு இலங்கையை பொறுப்புக்கூற செய்வதற்கு அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வலியுறுத்த வேண்டும் என்று கோரி அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தக் கடிதத்தை அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்ரனி பிளிங்கனுக்கு அவர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும், இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் சித்திரவதைகள் மற்றும் சர்வதேச குற்றங்கள் என்பன சர்வதேச சட்டத்தையும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தையும் மீறியுள்ளன. அத்துடன், இது தொடர்பில் இலங்கையில் நீதியும் பொறுப்புக்கூறலும் இல்லாமை கவலையளிக்கிறது.

இலங்கையில் குற்றங்களில் ஈடுபட்டவர்கள்

11

## மகிந்த மற்றும் படைகளிடம் ஆயுதமும் பணமும் பெற்றோம்!

### சபையில் கூறினார் பிள்ளையான்

கொழும்பு, செப். 23

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிர்வாகத்திடமும் இறுதிப் போரை வழிநடத்திய இராணுவத்திடமும் நாங்கள் ஆயுதங்களையும் பணத்தையும் பெற்றோம் என்று பிள்ளையான் என்று அறியப்பட்ட இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்திலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் முன்னாள் இராணுவதளபதி சரத் பொன்சேகாவும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு உதவினார்கள் என்பது ஒன்றும்

11

தியாகி திலீபன் நினைவுகூரல்:

## பயங்கரவாத தடை வழக்கில் சிவாஜிலிங்கத்துக்கு பிணை!

கொழும்பு, செப். 23

தியாகதீபம் திலீபனை நினைவேந்தல் செய்தமைக்காக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் எம். கே. சிவாஜிலிங்கத்துக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் அவரை பிணையில் செல்வதற்கு நேற்று அனுமதித்தது கொழும்பு மேல் நீதிமன்றம்.

கடந்த 2020ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தியாக தீபம் திலீபன் நினைவேந்தலை ஏற்பாடு செய்தமை அல்லது அதில் பங்குபற்றியமை தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கத்துக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிவாஜிலிங்கத் தின் மீது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தொடரப் பட்ட வழக்கில் நேற்று அவர் மன்றில்

11



## நாகர்கோவில் ம. வி. படுகொலை; 28 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

வடமராட்சி, செப். 23

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மகா வித்தியாலய மாணவர் படுகொலையின் 28ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நாகர்கோவில் மகா வித்தியாலய பாடசாலை மீது 1995ஆம் ஆண்டு செப்ரெம்பர் 22ஆம் நாள்

11

## திலீபன் நினைவேந்தலுக்கு தடை விதிக்க மன்று மறுப்பு

யாழ்ப்பாணம், செப். 23

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை கோரி சட்டமா அதிபர் திணைக்களத்தின் விசேட குழுவால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகளை அடுத்து நினைவேந்தலுக்கு தடை விதிக்க நீதிமன்று மறுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்குமாறு கோரி கொழும்பில் இருந்து ஹெலிகொப்டர் மூலம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதிகள் வருகை தந்தனர்.

இந்த மனு மீதான விசாரணை நேற்று வெள்ளிக்கிழமை மன்றில் எடுக்கப்பட்டது.

11

# இப்படியும் நடக்கிறது

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன அண்மையில் தெரிவித்திருந்த கருத்து ஒன்று பலரின் கவனத்தையும் பெற்றிருந்தது.

எதிர்வரும் வரவு - செலவு திட்டத்தில் தேர்தலுக்காகப் பணம் ஒதுக்கப்பட்டால் மக்களுக்குத் தேவையான பெற்றோல், டீசல், எரிவாயு, மண்ணெண்ணெய் போன்றவற்றை பெற்றுக்கொள்ள முடியாது என்று வஜிர தெரிவித்திருக்கிறார்.

இதற்கு பதிலளித்துள்ள முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், 'ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு அரசு முற்படுமானால் நாட்டில் நிர்வாகக் கட்டமைப்பு முழுமையாக சீர்குலையும். சர்வதேச மட்டத்தில் எந்தவொரு சட்டபூர்வமான நகர்வுகளிலும் ஈடுபட முடியாமல்போகும்.' என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

வஜிர சொல்ல வருவது, அடுத்த ஆண்டு தேர்தலுக்காக- அதாவது கட்டாயம் நடத்தப்பட வேண்டிய ஜனாதிபதி தேர்தலுக்காக - எதிர்வரும் நவம்பர் மாதம் தாக்கல் செய்யப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படுமானால், எரிபொருள் வாங்க பணம் இல்லாமல்போய்விடும் என்கிறார். அதாவது இப்படியொரு பயமுறுத்தலை செய்வதன் மூலம் அவர் தேர்தல் ஒத்திவைக்கப்படவேண்டும் என்பதை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கின்றார் என்பது தெரிகின்றது.

2024 ஒக்ரோபர் மாதத்துக்குள் கட்டாயம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதுதான் நாட்டு சட்டம். 2024 நவம்பரில் புதிய ஜனாதிபதி பதவியேற்கவேண்டும்.

வஜிர அபேவர்த்தன கூறுவதுபோல் ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படுமானால் என்ன நடக்கும்? 2024 ஒக்ரோபருக்கு பின்னர் நாட்டில் சட்டவிரோத - அரசமைப்புக்கு முரணான ஜனாதிபதியே ஆட்சியில் இருப்பார்.

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்த முடியாமல்போகும்.

ஐக்கிய தேசியக் கட்சியில் வஜிர ஒரு பலமான தலைவர். அவரே இன்று ஐக்கிய தேசியக் கட்சியின், கட்சி அலுவல்களை பிரதானமாக ஒருங்கிணைத்து வருபவர்.

அடுத்த தேர்தலுக்காக மிகப் பெரும் கூட்டணி ஒன்றை ஐ. தே. க. தலைமையில் அமைப்பதற்கான பணிகளை பின்னணியிலிருந்து செய்துகொண்டிருப்பவர். பாராளுமன்றத்தில் ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்காக நடந்த தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக ஆட்களைத் திரட்டுவதில் முக்கிய பங்கு வகித்தவர் அவர். அவர் இல்லத்திலேயே முக்கிய 'டீல்கள்' நடந்தன என்று அப்போது பேசப்பட்டதுண்டு.

அவர், இப்போது தேர்தலை ஒத்திவைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவது பலரின் கவனத்தையும் பெற்றிருக்கின்றது. அதனால் அது குறித்து அறிந்து கொள்வதற்காக இந்த ஊர்க்குருவி பலருடன் பேசியபோது பல விடயங்கள் தெரியவந்தன.

ஒன்று, ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பலரை இழுத்தெடுக்க நடந்த முயற்சிகள் இதுவரை பயனளிக்கவில்லை. பலரும் மதில்மேல் பூனையாகவே இருந்துகொண்டிருக்கின்றனர். இரண்டாவது, பலமுள்ள அயல் நாடு ஒன்று, பொதுவேட்பாளர் ஒருவரை களம் இறக்குவதற்கு திரைமறைவில் முயன்றுகொண்டிருக்கின்றது. மூன்றாவது, ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக சஜித் பிரேமதாஸ களம் இறங்கமாட்டார் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அவர் இப்போது தான் போட்டியிடுவது என்பதில் திடமாக இருக்கிறார். அவரையே பொதுவேட்பாளராகக் களம் இறக்கினால் எப்படி வெற்றிவாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதை அந்த அயல்நாடு ஆராய்ந்து வருகின்றது. சஜித் பொதுவேட்பாளராக போட்டியிடும்பட்சத்தில் ரணில் நம்பும் சிறுபான்மையினர் வாக்குகள் கிடைப்பது நம்பிக்கைக்குரியதாக இருக்காது.

இப்படி பல காரணங்களால், தேர்தலில் இலகுவான வெற்றியை அடைய முடியாது என்ற எண்ணம் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு ஏற்பட்டிருப்பதாக தெற்கில் அவர்களுடன் நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

சில தினங்களுக்கு முன்னர் ரணிலின் நெருங்கிய நட்பு வட்டாரத்தில் இருப்பவரும், முன்னாள் மத்திய வங்கி ஆளுநருமான இந்திரஜித் குமாரசாமி, அடுத்த ஆண்டு தேர்தல் ஒன்று நடைபெற்றால், ஏற்கனவே ஏற்பட்டதைவிட பல மடங்கு பெரிய அளவில் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்று எச்சரிக்கை விடுத்திருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இப்போது ரணிலின் முக்கிய அரசியல் சகாவான வஜிர, தேர்தல் ஒன்றுக்காக பணத்தை ஒதுக்கினால், எரிபொருள் வாங்குவதற்கு நாட்டில் பணம் இருக்காது என்று எச்ரிக்கை விடுத்திருக்கிறார்.

ஆக, பாராளுமன்றில் தனக்கிருந்த ஐந்தில் ஒரு பெரும்பான்மையை வைத்து தேர்தல் நடத்தாமலே ஆட்சியைத் தொடர ஜே. ஆர். முயன்றது போல, பொருளாதார நெருக்கடியை காரணம்காட்டி தேர்தலை நடத்தாமலே ஆட்சியில் தொடர ரணில் முயல்கிறாரோ என்று சந்தேகம் ஏற்படுவதை தவிர்க்க முடியவில்லை.!

**- ஊர்க்குருவி.**

# குறிகாட்டுவான் இறங்குதுறையை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 23

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகத்துக்கு பொருட்களை கொண்டு செல்வதில் சிரமங்களை எதிர்கொள்வதனால் மிக விரைவில் குறி காட்டுவான் இறங்குதுறையை புனரமைப்பு செய்து தருமாறு தீவக மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்தின் ஒரே மையமாக குறிகாட்டுவான் இறங்குதுறை காணப்படுகின்றது. தற்போது இந்த இறங்குதுறை சேதமடைந்துள்ளமையால், கனரக வாகனங்கள் இறங்குதுறைக்கு அண்மித்த பகுதிக்கு வர தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் கனரக வாகனங்களில் நயினாதீவு மற்றும் நெடுந்தீவுக்கு கொண்டு செல்வதற்காக கொண்டு வரப்படும் , அத்தியாவசிய பொருட்கள் உட்பட கட்டட பொருட்களான மணல் , கம்பி, சிமெந்து ஆகியவை இறங்குதுறைக்கு சற்று தொலைவில் இறங்கி அங்கிருந்து மனித வலுவை பயன்படுத்தி தூக்கி சென்று படகுகளில் ஏற்ற வேண்டிய நிலைமை காணப்படுகிறது. இதனால் பொருட்களை கொண்டு செல்வோர் அதிக சிரமங்களை எதிர் கொள்வதுடன் அதிகளவான கூலியும் வழங்க வேண்டிய நிலையில் காணப்படுகின்றனர்.

இதேவேளை குறிகாட்டுவான் - நயினாதீவுக்கு இடையில் சேவையில் ஈடுபட்டு வந்த 'கடற்பாதை' மிக மோசமாக பழுதடைந்துள்ளமையால் அதன் சேவையும் கடந்த சில மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், நயினாதீவுக்கு பொருட்களை எடுத்து செல்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் மற்றும் நாக விகாரை ஆகியவற்றுக்கு அதிகளவான பக்தர்கள் தினமும் செல்வதனால் பயணிகள் படகு சேவையில் பொருட்களை அதிகளவில் ஏற்ற முடியாத நிலைமை காணப்படுகிறது. எனவே, நயினாதீவுக்கு பொருட்களை கொண்டு செல்வோர் நெருக்கடியை எதிர் கொண்டுள்ளனர்.

இதனால் மிக விரைவில் குறிகாட்டுவான் பாலத்தையும் , கடற்பாதையை புனரமைப்பு செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஐ)

# சீனாவிடம் வாங்கிய கடன் குறித்து அரசு மௌனம் சாதிப்பது ஏன்?

## இலங்கை ஆசிரியர் சங்கம் கேள்வி

யாழ்ப்பாணம், செப். 23

சீனாவிடம் இருந்து இலங்கை அரசாங்கம் பெற்றுக் கொண்ட கடன் தொடர்பில் இலங்கை அரசாங்கமும் அல்லது சீன அரசாங்கமோ ஏன் மௌனம் காக்கிறார்கள் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மகிந்த தேசிங்க கேள்வி எழுப்பினார்.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளில் சீனா முதலிடம் வகிக்கின்ற நிலையில் தற்பொழுது ஐ. எம். எவ் ஏற்கனவே கடன் வழங்கி உள்ள நிலையில் தற்போது சீனக் கடன் சம்மதமாக அறிக்கை கேட்ட போது இலங்கை அரசாங்கம் வாய் திறக்கவில்லை.

சீனா அரசாங்கமோ இலங்கைக்கு வழங்கிய கடனுக்கான கால நீடிப்புத் தொடர்பில் எது வித கருத்துக்களும் கூறப்படவில்லை. எனவே, கடந்த காலத்தில் மத்திய வங்கி ஆளுநர் எமது நாடு வெளிநாட்டில் பெற்ற கடன்களை திருப்பி செலுத்தாது என வெளிப்படையாக கூறியமையால் பிரச்னை வந்தது.

தற்போது சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கி அதற்கு தவணை போடும் போது அனைத்து நிபந்தனைகளுக்கும் இலங்கை உட்பட வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது.

அதுமட்டுமல்ல வெளிநாடுகளில் பெற்ற கடனுக்கு அந்த நாடுகள் விதிக்கின்ற நிபந்தனைகளுக்கும் நாடு செவிமடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இலங்கை சீனாவிடம் மட்டுமன்றி இந்தியாவிடமும் கடன்களை வாங்கியுள்ள நிலையில் இந்தியா விதிக்கும் நிபந்தனைக்கும் உட்பட வேண்டிய தேவை உள்ளது. அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாட்டிலிருந்து ஒன்பது இலட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், கணக்காய்வு திணைக்களம் கூறி இருக்கின்றது. வாங்கப்பட்ட கடனில் மூன்று ரில்லியன் ரூபா மாத்திரமே அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதாக ஏனெனில், மிகுதி 9 இலட்சம் கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டு ஊழல் செய்யப்பட்டு இருக்கின்றது.

ஆகவே, எமது நாட்டையும் மக்களையும் 75 வருடமாக ஆண்ட ஆட்சியாளர்கள் நாட்டையும் மக்களையும் பின்னோக்கி நகர்த்தியுள்ள நிலையில் தற்போது வெளிநாட்டு கடன் தொடர்பில் சரியான தீர்மானம் ஒன்றை எடுக்க முடியாத நிலையில் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ)

# 11 தமிழ் இளைஞர் படுகொலை; நீதி கோரி ஐ. நாவிடம் மனு!

கொழும்பு, செப். 23

கடற்படையால் கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட விவகாரத்துக்கு நீதி கோரி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் பணிமனையிடம் மனுவை கையளித்துள்ளனர்.

2008 முதல் 2009 வரை கப்பம் பெறுவதற்காக கொழும்பில் இலங்கை கடற்படையால் கடத்தப்பட்ட இளைஞர்கள் விவகாரத்துக்கு அதிகாரிகள் நீதி வழங்க தவறியுள்ளமை குறித்து சுட்டிக்காட்டி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கொழும்பில் உள்ள ஐ. நா. பணிமனையிடம் பல இராஜதந்திர அலுவலகத்திடம் மனுக்களை கையளித்தனர்.

இந்த விடயம் குறித்து சர்வதேச சமூகம் அக்கறையுடன் உன்னிப்பாக உள்ளதை அரசாங்கத்துக்கு வெளிப்படுத்த வேண்டும் என ஐ. நாவுக்கும் தூதரகங்களுக்கும் வழங்கியுள்ள கடிதத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற நடவடிக்கைகளில் கலந்துகொள்வதன் மூலமும் அரசாங்கத்துடன் பேச்சுகளில் ஈடுபடுவதன் மூலம் வேறு வழிகள் மூலம் சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் தனக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்த வேண்டும் எனவும் காணாமல்போ ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நீதிமன்ற அமர்வுக்கு செல்வதற்கும் சட்டத்தரணிகளுக்கு செலுத்துவதற்கான கட்டணங்களுக்காகவும் ஐ. நா. உதவவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஈழநாடு
Eelanadu
23.09.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# இந்திய - கனடா முறுகல்

இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் மோசமான நெருக்கடிநிலை ஏற்பட்டிருக்கின்றது. கனடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ வெளிப்படையாக இந்தியாவின் மீது கடுமையான குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்திருக்கின்றார். சீக்கிய பிரிவினைவாத அமைப்பு ஒன்றின் முக்கிய நபர் ஒருவரை கொலை செய்ததன் பின்புலத்தில் இந்திய அரசு செயல்பட்டிருப்பதாக நம்பகமான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன என்று ரூடோ குறிப்பிட்டிருக்கின்றார். அத்துடன், கனடாவுக்கான இந்திய தூதரக அதிகாரி ஒருவரையும் கனடிய அரசாங்கம் வெளியேற்றிருக்கின்றது. இதற்கு பதிலடியாக இந்தியா, கனடிய தூதரக அதிகாரியை இந்தியாவிலிருந்து வெளியேற்றிருப்பதுடன் கனடியர்கள் இந்தியாவுக்குள் நுழைவதையும் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

கனடிய அரசாங்கத்தின் அணுகுமுறையால் மேற்கு நாடுகள் கலக்கமடைந்துள்ளன. குறிப்பாக அமெரிக்காவும் இந்த முறுகலை விரும்பவில்லை. சீனாவை எதிர்கொள்வதில் இந்தியா ஒரு முக்கியமான பங்காளி. ரஷ்ய – உக்ரைன் யுத்தத்தில் இந்தியாவின் அணுகுமுறை தொடர்பில் மேற்கு நாடுகள் திருப்தியடையாது விட்டாலும்கூட, அது தொடர்பில் வெளிப்படையாக பேசுவதை அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் மிகவும் கவனமாகத் தவிர்த்துவருகின்றன. அண்மையில், இந்தியாவில் இடம்பெற்ற ஜி - 20 மகாநாட்டின் போது, இந்த விடயங்களை மேற்கு நாடுகள் சுட்டிக்காட்ட வேண்டுமென்று உக்ரைன் எதிர்பார்த்திருந்தது. ஆனால், அமெரிக்காவோ இந்த விடயத்தை சுட்டிக்காட்டவில்லை. காரணம் இந்தியாவுடனான நட்பில் சிக்கல்கள் ஏற்பட்டுவிடக் கூடாதென்பதே. இவ்வாறானதொரு சூழலில்தான் கனடாவின் வெளிப்படையான குற்றச்சாட்டால் நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தியாவின் செல்வாக்கும் முக்கியத்துவமும் உலக நாடுகள் மத்தியில் அதிகரித்து வருகின்ற நிலையில், கனடாவின் மேற்படி குற்றச்சாட்டு இந்தியர்கள் மத்தியில் கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கினறது. கனடிய எல்லைக்குள் ஒரு கனடிய பிரஜையை சுட்டுக் கொல்லும் விடயத்தில் இந்தியாவை தொடர்புபடுத்தும் விடயம் இந்தியாவை பொறுத்தவரையில் சாதாரணமான ஒன்றல்ல. அதேவேளை, இவ்வாறான விடயங்களின் போது கடைப்பிடிக்க வேண்டிய இராஜதந்திர நடைமுறைகளையும் கனடா பின்பற்றவில்லை. அதேவேளை, இந்திய அரசு இந்த விடயத்தில் தொடர்புபட்டிருப்பதாகக் கூறும் விடயத்தில் கனடாவிடம் ஆதாரங்களும் இல்லை. குறித்த நபர் சீக்கிய பிரிவினைவாத அமைப்பொன்றின் தலைவர். எனவே, அவரின் கொலையில் இந்தியா தொடர்புபட்டிருக்கலாம் என்னும் ஊகத்தை முன்வைத்தே இவ்வாறானதொரு குற்றச்சாட்டை கனடா முன்வைத்திருக்கின்றது.

பேச்சு சுதந்திரம் என்னும் பெயரில் இந்தியாவுக்கு எதிரான பிரசாரங்கள் கனடாவுக்குள் தாராளமாகவே அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. தாராளவாத ஜனநாயகத்தின் பெயரால் கனடா அவற்றை நியாயப்படுத்துகின்றது. ஆனால், அது இந்தியாவை பொறுத்தவரையில் விமர்சனத்துக்குரிய விடயமாக நோக்கப்படுகின்றது. இந்திய – கனடா எதிர்கால உறவில் இந்த விடயம் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதற்கு அப்பால் மோடியின் செல்வாக்கை இது அதிகரிப்பதற்கும் பயன்படக்கூடும். ஏனெனில், ஒட்டுமொத்த இந்திய ஊடகங்களும் இந்த விடயத்தில் கனடாவுக்கு எதிராகவே இருக்கின்றன. ஏனெனில், இங்கு ஆட்சியில் இருப்பது பா. ஜ. கவா அல்லது காங்கிரஸா என்பதற்கப்பால், இந்திய அரசின் மீது வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டை எதிர்ப்பதில் அனைவருமே ஒன்றாகவே இருக்கின்றனர். காங்கிரஸ் தலைவர்களும் இந்திய அரசின் மீது முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டை கடுமையாக எதிர்த்திருக்கின்றனர்.

மோடி தொடர்பில் மேற்குலக ஊடகங்கள் தொடர்ச்சியாக விமர்சனங்களை முன்வைத்து வந்திருக்கின்றன. ஆனால், இவ்வாறான விமர்சனங்கள் இந்திய இந்துக்கள் மத்தியில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். ஒப்பீட்டு அப்படையில் பா. ஜ. வின் செல்வாக்கு சற்று சரிந்திருந்தது. ஆனால், தற்போது இவ்வாறான சம்பவங்களால் அது அதிகரிக்கவே வாய்ப்பு உண்டு.

## ஐஸ் போதைப்பொருளுடன் யாழ். நகரில் நால்வர் கைது!

*யாழ்ப்பாணம், செப். 23*

*யாழ்ப்பாணத்தில் உயிர் கொல்லி போதைப்பொருட்களுடன் 20 வயதுக்கு உட்பட்ட நான்கு இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நால்வரும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய் யப்பட்டுள்ளனர்.*

*கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் நகரை அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்களாவர். இவர்கள் 19 மற்றும் 20 வயதுடையவர்கள். அவர்களிடம் இருந்து 4 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும், அதனை பயன்படுத்தும் இதர போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.*

*நால்வரையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)*

## நல்லூரில் மருத்துவ முகாம்

*யாழ்ப்பாணம், செப். 23*

*கண்புரை (கற்றாக்) நோயைக் கண்டறிந்து, அதற்கான சத்திர சிகிச்சை அளிப்பதற்கான நோயாளர்களை தெரிவு செய்யும் மருத்துவ முகாம் இன்று சனிக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது என்று சுகாதார மருத்துவ அதிகாரி ரி. பாலமுரளி அறிவித்துள்ளார்.*

*யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை கண் சிகிச்சை பிரிவினரின் பங்களிப்புடன் இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து நண்பகல் 12 மணி வரை நடைபெறும் இந்த மருத்துவ முகாமில் தேவை உடையவர்களை பங்குபற்றுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஐ)*

## இறக்குமதியாகும் பால்மாவுக்கு வரி 10 வீதத்தால் அதிகரித்தது!

*கொழும்பு, செப். 23*

*இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான துறை முகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி 10 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.*

*இந்த வரி அதிகரிப்பு நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது.*

*எவ்வாறாயினும், உள்ளூர் சந்தையில் பால்மாவின் விலை அதிகரிக்கப்படமாட்டாது எனவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.*

## ‘30 கோவில்’ நூல்கள் வெளியீட்டு விழா!

*யாழ்ப்பாணம், செப். 23*

*பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரத்தின் 30 கோவில் நூல்கள் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது.*

*வாழ்நாள் பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வாழ்த்துரைகளை இணுவைக் கந்தன் பிரதம குரு, சுன்னாகம் கதிரமலை சிவன் பிரதம குரு, அ. பஞ்சலிங்கம், செஞ்சொல்செல்வர் ஆறு. திருமுருகன், பேராசிரியர் க. தேவராசா, ஈசான சக்தி கிரீவ தேசிகர், கவிஞர் சோ. பத்மநாதன், கவிஞர் த. ஜெயசீலன் (யாழ். மாநகர ஆணையாளர் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவர்.*

*வெளியீட்டுரையை பண்டிதர் நா. கடம்பேஸ்வரன் ஆற்றுவார். முதல் பிரதிகளை நாகையா கிருபாகரன் பெறுவார். (ஐ)*

## ‘மலையகம் 200’: சிறுகதை, ஓவிய, கட்டுரை போட்டி

*யாழ்ப்பாணம், செப். 23*

*லண்டனில் இயங்கி வரும் ‘விம்பம்’ கலை, இலக்கிய, திரைப்பட, கலாசார அமைப்பு, ‘மலையகம்-200’ தொடர்பில், சிறுகதை, ஓவிய, கட்டுரை போட்டிகளை நடத்துகிறது.*

*எழுத்து, ஓவியம், கட்டுரை முதலான கலை ஆக்கங்களில் ஆர்வமுள்ள எல்லா தலைமுறையினரதும் ஆக்கத் திறனையும் கலை ஆற்றலையும் ஊக்குவிப்பதற்கான இந்த போட்டி, சிறுகதைகளும் ஓவியங்களும் கட்டுரைகளும், ‘மலையகம் 200 - கடந்து வந்த காலமும், காலூன்றி நிற்கும் நிலமும், நிலத்தில் ‘வலியும் வாழ்வும்’ என்னும் கருப்பொருளை அணுகியதாக அமைதல் வேண்டும்.*


*இலங்கை பிரஜைகளும் இந்தியாவில் வாழும் மலையகத் தமிழர்களும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.*

*போட்டிக்கு வயதெல்லை இல்லை. ஒருவர் எத்தனை ஆக்கங்களையும் அனுப்பலாம்.*

*ஆக்கங்களை, யுனிகோட் அல்லது பாமினி எழுத்துருவில் தட்டச்சு செய்து,* mala iyag am200 vimbam@gmail.com *என்ற மின் அஞ்சலுக்கு அனுப்பி வைக்கலாம்.* A3 *தாளில் வரையப்பட்ட ஓவியங்களின் ஒளிப்பட நகல்கள் (போட்டோ) அல்லது ஒளி வருடி நகல்கள் (ஸ்கான் கொப்பி) அனுப்பப்பட வேண்டும். எண்ணிம (டிஜிற்றல்) ஓவியங்கள் பங்கேற்க முடியாது.*

*ஆக்கங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி 30.09.2023. தேர்வாகும் சிறுகதைகள், கட்டுரைகள் தனித்தனி நூலாக வெளியாகும். தேர்வாகும் ஓவியங்கள் இலங்கையின் 4 பிரதான நகரங்களில் கண்காட்சிக்கு வைக்கப்படும். மேலும் விபரங்களை மின் அஞ்சல் வாயிலாக தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



செப்ரெம்பர் - 23 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம் - புரட்டாசி 06
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : நவமி




**மேடம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். விலை உயர்ந்த ஆபரணங்களை வாங்குவீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**மிதுனம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**கடகம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள். திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**
எதிர்ப்புகள் அடங்கும். உறவினர்களிடம் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். ஊழியர்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள்.

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். மாறுபட்ட அணுகுமுறையால் முன்னேறும் நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் அதிருப்தியான சூழ்நிலை உருவாகும். நிதானம் தேவைப்படும்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வாகனத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும்.

**மகரம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகள் பலிதமாகும். லாபம் பெரும் நாள்.

**கும்பம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். நன்மை நடக்கும்.

**மீனம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். வியாபாரத்தில் சூளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

# காவிரி கரையிலிருந்தே இந்திய வரலாறு எழுதப்பட வேண்டும்!

**அமைச்சர் தங்கம் தென்னரசு**

தஞ்சாவூர், செப்.23

இந்தியாவின் வரலாறு கங்கை சமவெளியில் இருந்து இல்லாமல் காவிரி கரையில் இருந்து எழுதப்பட வேண்டும் என தமிழக நிதி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

முன்னாள் முதல்வர் கருணாநிதி நூற்றாண்டு கருத்தரங்கு தொடக்க விழா தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கருத்தரங்கைத் தொடங்கி வைத்து, அமைச்சர் தங்கம் தென்னரசு பேசுகையில்,

தமிழகத்தின் வரலாறு முதன் முதலில் நமக்கு அன்பில் செப்பேடுகள் மூலம்தான் தெரியவந்தது. அதன் மூலம்தான் சோழர்களின் கொடை, ஆட்சிமுறைகள் போன்றவை வெளியுலகுக்கு தெரியவந்தன. இந்தியாவின் வரலாறு கங்கை சமவெளியில் இருந்து எழுதுவது அல்ல, அது காவிரி கரையில் இருந்து எழுதக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதை நிருபிக்கக்கூடிய வகையில் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

கீழடி, பொருநை, வெம்பக்கோட்டை, வைப்பாறு போன்ற இடங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மூலம் தமிழகத்தின் வரலாறு எந்த அளவுக்குப் பின்னோக்கிச் செல்கிறது என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

தமிழரின் நாகரிகம், சமுதாயம் போன்றவை எப்படி இருந்தன, அவை எப்படி மறைக்கப்பட்டன என்பதை எல்லாம் நாம் அறிந்துகொண்டால்தான், எதிர்காலத்தில் வரக்கூடிய சவால்களை எதிர்கொள்ள முடியும் - என்றார். (ஐ)

**சனாதன சர்ச்சை பேச்சு:**

# அமைச்சர் உதயநிதியை பதிலளிக்குமாறு உச்சநீதிமன்றம் அறிவிப்பு அனுப்பியது!

புதுடில்லி, செப். 23

சனாதன சர்ச்சைப் பேச்சு தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும், சனாதன எதிர்ப்பு மாநாட்டில் அமைச்சர்கள் பங்கேற்றது தொடர்பாக தமிழக அரசும் பதிலளிக்க அறிவித்தல் பிறப்பித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னையில் நடைபெற்ற தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சனாதன ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய உதயநிதி ஸ்டாலின், “இந்த மாநாட்டின் தலைப்பே மிகவும் சிறப்பாக அமைந்திருக்கின்றது. ‘சனாதன எதிர்ப்பு மாநாடு’ என்று போடாமல் ‘சனாதன ஒழிப்பு மாநாடு’ என்று நீங்கள் போட்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகள். சிலவற்றை நாம் ஒழிக்கத்தான் வேண்டும். எதிர்க்க முடியாது. நுளம்பு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கொரோனா இதையெல்லாம் நாம் எதிர்க்கக் கூடாது. ஒழித்துக்கட்ட வேண்டும்.

அப்படித்தான் இந்த சனாதனம். சனாதனம் என்பதை எதிர்ப்பதைவிட, ஒழிப்பதே நாம் செய்ய வேண்டியதே முதல் காரணம். எனவே, இந்த மாநாட்டுக்கு மிகப் பொருத்தமான தலைப்பு வைத்திருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய பாராட்டுக்கள்” எனத் தெரிவித்திருந்தார். இது தேசிய அளவில் விவாதப் பொருளாகி பல்வேறு விமர்சனங்கள் எழுந்தது. மேலும், பா. ஜ. க. மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில், உதயநிதி ஸ்டாலினுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்தியாவில் வாழும் கோடிக்கணக்கான இந்து மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில் பேசியுள்ளனர். எனவே, உதயநிதி உள்ளிட்டோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். சனாதன ஒழிப்பு மாநாட்டு நிகழ்ச்சியில் அமைச்சர்கள் உதயநிதி, சேகர் பாபு கலந்துகொண்டதை சட்ட விரோதம் என அறிவிக்க வேண்டும். மேலும், சனாதனம் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துகளை பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும். இந்த நிகழ்ச்சி நடத்தியதன் பின்னணியில் ஏதேனும் சதி உள்ளதா என்பது குறித்து கண்டறிய சி. பி. ஐ. விசாரணைக்கு உத்தரவிடக் கோரி ஜெகநாதன் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருநதார்.

இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், இந்த வழக்கை உச்ச நீதிமன்றம் ஏன் விசாரிக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பினர். மேலும், இந்த விவகாரம் தொடர்பாக ஏதேனும் உயர் நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் பெறலாம் எனக்கூறி வழக்கை விசாரிக்க மறுப்பு தெரிவித்தனர்.

அப்போது மனுதாரர் நீதிபதிகள் முன்பு, நுளம்பு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கொரோனா இதையெல்லாம் நாம் எதிர்க்கக் கூடாது. ஒழித்துக்கட்ட வேண்டும். அதுபோலத்தான் சனாதனம் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியிருந்ததை சுட்டிக்காட்டி, விடாமல் கூறிக் கொண்டே இருந்தார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், சனாதன சர்ச்சை பேச்சு தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும், சனாதன எதிர்ப்பு மாநாட்டில் அமைச்சர்கள் பங்கேற்றது தொடர்பாக தமிழக அரசும் பதிலளிக்க அறிவித்தல் பிறப்பித்து உத்தரவிட்டனர். (ஐ)

# “எனக்கும் அ. தி. மு. கவுக்கும் எந்தப் பிரச்னையும் இல்லை!”

மதுரை, செப். 23

எனக்கும், அ. தி. மு. கவுக்கும் பிரச்னை இல்லை என பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

அதேபோன்று அ. தி. மு. கவுக்கும் பா. ஜ. க. தலைவர்களுக்கும் இடையே பிரச்னை ஏதும் இல்லை என முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இரு கட்சிகளிடையே சமரசம் ஏற்பட்டு வருகிறது.

முன்னாள் முதல்வர் அண்ணா தொடர்பாக சமீபத்தில் பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அவரது கருத்துக்கு அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் சி. வி. சண்முகம் கண்டனம் தெரிவித்து பேசியிருந்தார்.

இதற்கு எதிர்வினையாக அண்ணாமலை அளித்த பேட்டி இரு கட்சிகளிடையே கடும் வார்த்தைப் போரை ஏற்படுத்தியது. அதிமுக கூட்டணியில் பா. ஜ. க. இல்லை என முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் அதிகாரபூர்வமாக அறிவித்தார். இந்நிலையில் இரு கட்சி தலைவர்களிடையே சமரசம் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில், கோவை விமான நிலையத்தில் நேற்று அண்ணாமலை செய்தியாளர்களிடம் கூறியதாவது: அண்ணாமலைக்கும், அதிமுகவுக்கும் பிரச்சினை இல்லை. பா. ஜ. கவுக்கும், அ. தி. மு. கவுக்கும் பிரச்னை இல்லை. அ. தி. மு. கவில்உள்ள சில தலைவர்களுக்கும் அண்ணாமலைக்கும் பிரச்னை இருக்கலாம்.

இயற்கையாக முட்டல், மோதல்கள் வருவது சகஜம். அதை தனிப்பட்ட முறையில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. மோடி மீண்டும் பிரதமர் ஆக வேண்டும் என்பதே எங்களை இணைக்கும் புள்ளி. முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ சொல்வதுபோல், மத்தியில் மோடி, மாநிலத்தில் பழனிசாமி என்பதை நான் எப்படி சொல்ல முடியும். அதை தேசிய தலைவர்தான் சொல்ல முடியும். அது என் வேலை கிடையாது. தமிழகத்தில் பா. ஜ. க. ஆட்சி அமைக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இங்கு தலைவராக இருக்கிறேன்.

அ. தி. மு. கவில் 4 பேர் பேசியுள்ளனர். அவர்களின் தனிப்பட்ட ஒவ்வொரு பேச்சுக்கும், நான் பதில் கருத்து சொல்வது நன்றாக இருக்காது. பா. ஜ. க. தேர்தலில் போட்டியிடும்போது பெறும் வாக்கு சதவீதம்தான் அதற்கு பதில்.

மது ஒழிப்புக்கு இலக்கணம் அண்ணா. குடும்ப அரசியலை எதிர்த்தவர் அண்ணா. அண்ணாவை தரக்குறைவாக நான் விமர்சிக்கவில்லை. அண்ணா பற்றி நான் பேசியதற்கு மன்னிப்பு கேட்க முடியாது. சரித்திரத்தில் உள்ளதைத்தான் பேசுகிறேன் என்றார். (ஐ)

# இராணுவத் தலைமையகத்தைக்கூட பாதுகாக்க தவறியவரே பொன்சேகா

## குற்றம்சாட்டுகின்றார் மைத்திரிபால

கொழும்பு, செப். 23

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தன்மீது முன்வைத்த குற்றச்சாட்டுகளை சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன முற்றாக நிராகரித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற விவாதத்தின்போது பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கிடையில் கடும் சொற்போர் இடம்பெற்றது. அவ்வேளையிலேயே பொன்சேகா கூறுவது பொய் என மைத்திரி குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

அப்பட்டமான பொய்களையே இவர் (பொன்சேகா) கூறினார். அவர் இராணுவ தளபதியாக இருந்தபோது ஆயிரம் முதல் ஆயிரத்து 500 வரையில் எமது பையன்கள் ஒரே தடவையில் உயிரிழந்தனர். இது பற்றி அவர் கதைப்பதில்லை.

இராணுவத் தளபதியாக இருந்து, அவரால் இராணுவ தலைமையகத்தைக்கூட பாதுகாக்கமுடியாமல் போனது. அவரை ஒரு வாகனத்திலும், அவரின் வயிற்றுப் பாகங்களை மற்றுமொரு வாகனத்திலுமே கொண்டுசெல்ல நேரிட்டது. இப்படியானவர் தேசிய பாதுகாப்பு பற்றி கதைக்கின்றார். நாடாளுமன்ற தெரிவுக்குழு என்பது அரசியல் நோக்கம் கொண்டதாகவே இருந்தது. அது ஒரு தலைபட்சமாகவே செயற்பட்டது.-என்றார்.

(அ)

# சகல சமூகங்களையும் ஒன்றிணைத்துள்ளோம்!

## இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்

முல்லைத்தீவு, செப். 23

“சமாதானமின்மையினால் ஏற்பட்ட வடுக்களை நிவர்த்தி செய்யவே அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைத்துள்ளோம்” என கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

உலக சமாதான நாளான நேற்று முன் தினம், முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் சமாதானமின்மையினால் ஏற்பட்ட வடுக்களை நிவர்த்தி செய்யும் விதமான அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைத்து இந்நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.



எமது நாட்டில் சமாதானமின்மையால் ஏற்பட்ட பிரச்னைகள் ,அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள், பொருளாதார தாக்கம் என்பவற்றை நாம் அறிவோம்.

இனிமேல் எந்தவகையிலேயும் சமாதானம் இல்லாமல் போகக்கூடாது என்ற அடிப்படையில் உலக சமாதான தினத்தன்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இதனை முன்னெடுத்துள்ளோம்-என்றார்.

# எனக்கு தேவை நீதி நட்டஈடுகள் அல்ல!

## ஜோன்ஸ்டன் பெர்னான்டோ

கொழும்பு, செப். 23

கலவரத்தின்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈடுகளை வழங்குவதை விட குறித்த பிரச்சினைகளுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதே அவசியம் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்களுக்கு இழப்பீடு வழங்குதல் என்னுடைய துக்கம் சந்தோசம் குறித்து பிரச்சினை இல்லை.

அன்று அவ்வாறு நடந்துகொண்டது சரியா பிழையா என்பது பற்றியே பேச வேண்டும்.

பயங்கரவாதத்திற்கு இடமளிக்க முடியுமா?

தீ வைத்தது சரியா? அமரகீர்த்தியை கொலை செய்தது சரியா? அதனை தான் கேட்கவேண்டும் இழப்பீடு அல்ல.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவரின் வீட்டிற்கு சென்று தாக்குதல் நடத்தியது சரியா? எல்லாமே பிழைதான்.

87, 89 களில் அப்பாவி மக்களை கொன்றது சரியா? அவைகள் பிழை என்றால் காலிமுகத்திடல் தாக்குதலும் பிழைதான்-என்றார்.

(அ)

# 279 பொருட்களுக்கு மட்டுமே இறக்குமதிக் கட்டுப்பாடுகள்!

கொழும்பு, செப். 23

தற்போது 279 பொருட்களுக்கு மட்டுமே இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக என பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அந்நிய செலாவணித் தட்டுப்பாடு காரணமாக 1,467 பொருட்களுக்கு இறக்குமதிப் பொருட்கள் தடை செய்யப்பட்டன.

மேலும், பஸ்கள் மற்றும் ட்ரக்குகள் மீது விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வலுவான பொருளாதார சீர்திருத்தம் காரணமாக கடந்த வருடத்தில் இலங்கையில் பணவீக்கம் 66.7 சதவீதத்திலிருந்து 4.6 சதவீதமாக குறைந்துள்ளது.

கடந்த ஆண்டில், அரசாங்கம் நாட்டின் வெளிநாட்டு கையிருப்பை 1.8 பில்லியன் டொலர்களில் இருந்து 3.8 பில்லியன் டொலர்களாக வெற்றிகரமாக உயர்த்தியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதும், பொருளாதாரத்தில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்திய 14 மணி நேர மின்வெட்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்டு மக்களுக்கு நிலையான மற்றும் தடையில்லா மின்சாரம் வழங்குவதை அரசாங்கம் உறுதி செய்துள்ளது-என்றார்.

(அ)

# பாராளுமன்ற உறுப்பினர்கள் போல எங்களுக்கும் நட்டஈடு தரவேண்டும்!

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம்

கொழும்பு, செப். 23

வீடுகள் சேதமடைந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்படுமானால் குறித்த தாக்குதலில் சேதமடைந்த தனியார் பஸ்களுக்கும் நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கரத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுமார் 50 தனியார் பஸ்கள் சாம்பலாகியுள்ளன. அதேபோல் சுமார் 50 பஸ்கள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

காப்புறுதி ஊடாக கிடைக்கும் நிதி போதுமானது அல்ல. வீடுகள் சேதமடைந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நட்டஈடு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



ஆனால் பஸ் உரிமையாளர்கள் ஒரு பகுதியினருக்கு கூட இது கிடைக்கவில்லை.

பஸ் ஒன்றுக்கு 10 மில்லியன் பெறுமதியில் 50 பஸ்களுக்கு 500 மில்லியன் ரூபாவே செலவாகும். இது மிகப்பெரிய தொகையும் அல்ல-என்றார்.

(அ)

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விடயத்தில் அநீதி இழைக்கப்படக்கூடும்

## அச்சம் வெளியிடுகிறார் ரவிகரன்

முல்லைத்தீவு, செப். 23

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விடயத்தில் அநீதி இழைக்கப்படுமோ என்ற அச்சம் காணப்படுவதாக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்திற்கு நீதி கோரி வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினால் நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றைய தினம் உலக சமாதான தினமாகும். ஆனால் இலங்கையை பொறுத்தவரை சமாதானம் என்பது எட்டாக்கனியாகவே உள்ளது.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விடயத்தில் அநீதி இழைக்கப்படுமோ என்ற அச்சம் காணப்படுகின்றது. அதே போன்று ஐ.நாவின் ஆணையாளர் நாயகம் இலங்கையில் மனித உரிமை மீறப்பட்டுள்ளது, வறுமையில் இலங்கை 25 வீதமாக இருக்கின்றது. சர்வதேச நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்ற கருத்துக்கள் அடங்கிய அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

எங்களுடைய கதறல்கள், கூக்குரல்கள் வீதிகளில் நின்று போராடுகின்ற போராட்டங்கள் என அத்தனை போராட்டங்களாலும் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கருத்து குறிப்பிடப்பட்டும் சர்வதேச நாடுகள் ஏன் இதுவரை தலையிடவில்லை. இப்படி ஒரு கொடுமையான அரசுக்கு கீழ் தான் நாம் வாழ்கின்றோம்.

வடக்கு-கிழக்கு மக்களின் நிலங்களை எடுக்கின்றார்கள், சிறுக சிறுக மதங்களை அழிக்கின்றார்கள். பௌத்த மயமாக்குகின்றார்கள். கடலும் பறிபோய் கொண்டிருக்கின்றது. இப்படி எமது வாழ்வாதாரம் உட்பட நிலங்களையும் அபகரித்து எங்களை பூர்வீகமற்றவர்களாக் குகின்றார்கள் இந்நிலை மாற வேண்டும்.



சனல் 4 ஊடகத்தில் ஈஸ்டர் குண்டு தாக்குதல் காணொளி வெளியானதன் பிற்பாடு 300 இற்கு மேற்பட்ட மக்கள் இறந்ததற்காக எல்லோரும் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

அதை நாம் மறுக்கவில்லை. கொலைகாரக் கும்பல் தான் ஆட்சியில் இருக்கின்றது. ஆண்டாண்டு காலமாக ஆட்சி செய்து வந்திருக்கின்றது என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இறந்து பல ஆண்டு காலமாக நிகழ்ந்து கொண்டிருக்கும் கொடுமை இந்த அரசாங்கத்திற்கு ஏன் எங்கள் நிலமை அவர்களது பார்வையில் படவில்லை-என்றார்.

(அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து உண்மை கண்டறியப்பட வேண்டும்!

## சபையில் சஜித் பிரேமதாஸ வலியுறுத்து

கொழும்பு, செப். 23

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாகவும், அது தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகள் மற்றும் அதனால் பாதிக்கப்பட்ட சமூகம் சார்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் பிரேரணையாக இந்த விவாதம் முன்வைக்கப்பட்டது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவறுக்கும் சேறு பூசவோ அவமதிக்கவோ அல்லவெனவும், இதன் முக்கிய நோக்கமும் குறிக்கோளும் உண்மை என்ன என்பதைப் புரிந்துகொள்வதாகும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு அமைய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தற்போதைய தேசிய பாதுகாப்பு தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தின் தொடர்ச்சியாக பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

ல் 4 இல் வெளியான காணொளி ஒன்றினால்தான் இது பேசு பொருளாகியதாக ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் கூறினாலும் அவ்வாறு சொல்பவர்கள் இது சம்பந்தமாக எந்த யோசனையும் இல்லாத தூக்கத்தில் இருக்கும் எம்.பி.க்களே என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் உண்மை மற்றும்



இதன் பிரதான சூத்திரதாரிகள் குறித்து முழு நாடும் விழிப்புடன் இருந்து வருவதாகவும், இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் விழிப்புடன் இருந்து பேசி வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ஊறினார்.

ஐக்கிய அமெரிக்க குடியரசு செப்ரெம்பர் 11,2001 அன்று நடந்த தாக்குதல் குறித்து ஒரு ஆணைக்குழு அறிக்கையை தயார் செய்தாலும், எதிர்க்கட்சித் தலைவராக தான் அமெரிக்கக் குடிமகன் இல்லை என்றாலும் அந்த அறிக்கை தற்போது தம் வசம் உள்ளதாகவும்,இலங்கைப் போன்று பொய்யான நிபந்தனைகளை முன்வைத்து அறிக்கைகளை மறைக்கவில்லை என்றும், பாரபட்சமற்ற விசாரணையை முன்னெடுத்ததாகவும்,கட்சி பேதமின்றி அவர்கள் ஆணைக் குழுவில் பணியாற்றியதால் உண்மையை கண்டறிய முடிந்ததாகவும், நீண்ட கால பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

9/11 தாக்குதலில் இருந்து அமெரிக்கா பாடம் கற்றுக் கொண்டாலும்,நம் நாட்டு தலைவர்கள் இன்னும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# தரக்குறைவான பூச்சிகொல்லிகளை வழங்கும் நிறுவனங்களின் உரிமம் இரத்து செய்யப்படும்

கொழும்பு, செப். 23

தரக்குறைவான பூச்சிகொல்லி மருந்துகளை வழங்கும் நிறுவனங்களின் உரிமம் இரத்துச் செய்யப்படுவதுடன் அந்த நிறுவனங்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அதன்படி, எந்தவொரு நிறுவனத்தாலும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பூச்சிகொல்லி மருந்துகளின் தரம் குறைவாக இருந்தால், அந்த நிறுவனங்களுக்கு எதிராக கடுமையான சட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

இலங்கை தேசிய விவசாயிகள் அமைப்புகளின் மாவட்டத் தலைவர்கள் விவசாய அமைச்சரிடம் சமர்ப்பித்த முறைப்பாட்டுக்கு அமைய அமைச்சர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

சில நிறுவனங்களிடம் இருந்து அதிக விலைக்கு கொடுக்கப்படும் பூச்சிகொல்லி மருந்துகள், களை கட்டுப்பாடு மற்றும் பூச்சி கட்டுப்பாடு ஆகியவற்றில் சரியான பலனைத் தரத் தவறியதால் அவை மோசமான நிலையில் இருப்பதாக அவர்கள் விவசாய அமைச்சரிடம் முறைப்



பாடு செய்திருந்தனர்.

இதேவேளை, விவசாயிகளின் கோரிக்கைகளுக்குப் பதிலளித்த அமைச்சர்,

ஏதேனும் ஒரு நிறுவனத்தால் விற்கப்படும் பூச்சிகொல்லி மருந்துகளின் தரம் குறைவாக இருப்பதாக உணர்ந்தால் உடனடியாக விவசாய அமைச்சகம், விவசாயத்துறை மற்றும் பூச்சிக் கட்டுப்பாட்டுச் செயலகத்துக்குத் தெரிவிக்க வேண்டும்.

இப் பருவத்தில் விவசாய சேவை நிலையங்களில் இருந்து பூச்சிகொல்லி மருந்துகளை விநியோகிக்கும் முறை ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதற்கமைவாக விவசாயிகள் விவசாய சேவை நிலையங்களில் இருந்து உயர்தர பூச்சிகொல்லி மருந்துகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்படும்-என்றார். (அ)

# கலாசாலையில் ஆங்கில தினம்

## பிரதம விருந்தினராக பரீட்சை ஆணையாளர்







யாழ்ப்பாணம், செப். 23

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆங்கில மன்றம் நடத்திய நூற்றாண்டு கால ஆங்கில தின விழா நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் எம். ஜீவராணி புனிதாவும் சிறப்பு விருந்தினராக பலாலி ஆசிரிய கலாசாலையின் ஒய்வுநிலை அதிபர் கவிஞர் சோ.பத்மநாதனும் கௌரவ விருந்தினராக கலாசாலையின் முன்னாள் ஆங்கிலத்துறை விரிவுரையாளர் திருமதி எம்.ஜே.எஸ் முத்துக்குமாரசாமியும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி சு. பரமானந்தம் மற்றும் ஆங்கில துறை விரிவுரையாளர்களான முகுந்தன் பற்றிக் ஆகியோரும் கலந்து கொண்டனர்

ஆங்கில தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டி நிகழ்வுகளுக்கான பரிசளிப்பு மற்றும் ஆசிரிய மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

(அ)

# ஆசிய ஒத்துழைப்பு இலக்கை அடைய ஈரானுக்கு முழுமையான ஒத்துழைப்பு

## இலங்கை உறுதி

கொழும்பு, செப். 23

ஆசிய ஒத்துழைப்பு இலக்குகளை அடைந்துக்கொள்ள ஈரானுக்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவதாக இலங்கை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத் தொடருக்கு இணையாக நடைபெற்ற 18 ஆவது அமைச்சர்கள் கூட்டத்தில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

தொற்றுநோய்க்குப் பிந்தைய நிலையான மீட்சி’ என்ற கருப்பொருளின் கீழ் கூட்டப்பட்ட இந்தக் கூட்டம், ஆசிய ஒத்துழைப்பு உரையாடல் மூலம் ஆசிய நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை ஆழப்படுத்தும்.

ஆசிய நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பை மீட்டெடுப்பதற்கான முக்கிய பொறிமுறையாக ஆசிய ஒத்துழைப்பு உரையாடல் உள்ளது.

ஆசிய சமூகத்தின் பிராந்திய அபிவிருத்தி மற்றும் எதிர்காலத்திற்கு பான்-ஆசிய தளமாக அதன் பாத்திரங்கள் மற்றும் கொள்கைகள் பங்களிக்க முடியும்.

கடந்த இரண்டு வருடங்களாக ஆசிய ஒத்துழைப்பு உரையாடலுக்கு பஹ்ரைன் தலைமை தாங்கியமைக்காக இலங்கை நன்றி தெரிவிக்கிறது-என தெரிவித்தார்.

(அ)

# அலி சப்ரி ரஹீமின் பாராளுமன்ற உறுப்புரிமையை இடைநிறுத்துக!

## பிரேரணையை முன்வைத்தார் சஜித்

கொழும்பு, செப். 23

முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் பாராளுமன்ற உறுப்புரிமையை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கான பிரேரணை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்களால் நேற்று பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

சட்டவிரோதமான முறையில் தங்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை இலங்கைக்குள் கொண்டு வந்தமைக்காக அபராதம் விதிக்கப்பட்ட அலி சப்ரி ரஹீம் பாராளுமன்ற



நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைக் குழுவின் விசாரணைக்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குழுப் பிரதிநிதித்துவத்தினால் பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை தொடர்பில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதால், குறித்த விசாரணைகள் நிறைவடையும் வரை குற்றம் சாட்டப்பட்ட உறுப்பினரின் குழுவின் பிரதிநிதித்துவத்தை இடைநிறுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

அலி சப்ரி ரஹீமுக்கு குறைந்த அபராதம் விதித்தமை தொடர்பில் ஆராயுமாறும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், அவர் பாராளுமன்றத்தில் இருக்கக்கூடாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளை கோட்டாபய ராஜபக்ஷ சீரழித்தார்!

## சபையில் கபீர் ஹாசிம் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 23

**கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவிக்கு வந்த பின்னர் ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமான விசாரணைகளை சீர்குலைக்க குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்த ஷானி அபேசேகரவை தென் மாகாணத்திற்கு இடமாற்றம் செய்தார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

தாக்குதலை நடத்தியது யார் என்பதை அறிய சுயாதீன விசாரணை நடத்தப்படவேண்டும் என்பதே எமது தேவை.

எமது நாட்டின் அரச நிறுவனங்களை எவ்வித நடைமுறைகளும் இன்றி கொள்ளை விலைக்கு விற்றனர்.

இதனால், இந்த அரசாங்கத்தின் மீது எவ்வித நம்பிக்கையும் இல்லை. செனல் 4 கூறியுள்ள விடயங்களை சரியாக தேடிப் பாருங்கள்.

சனல் 4 விடம் சாட்சியமளித்த ஆசாத் மௌலானா 2007 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் சார்பில் தேர்தலில் போட்டியிட்டவர்.

அவர் கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளராகவும் இருந்தார்.

ஷானி அபேசேகர பிரதான சந்தேக நபர்களிடம் விசாரணை நடத்தி கைது செய்திருந்தார்.

கோட்டாபய பதவிக்கு வந்த உடன் ஷானியை தென் மாகாணத்திற்கு மாற்றினர். விசாரணைகளை சீர்குலைக்கவே இவற்றை செய்தனர்.

வவுணதீவு பொலிஸ் காவலரண் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதனை ராஜபக்ஷ ஆதரவாளர்கள் விடுதலைப் புலிகள் மீது சுமத்தினர்.

எனது செயலாளர் மீதான தாக்குதலையும் சஹ்ரான் மீது சுமத்தாது வேறு பக்கம் திசை திருப்பினர்.

வனாத்துவில்லுவில் வெடிப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இராணுவ புலனாய்வுப் பிரிவினர் அதற்கு தடையேற்படுத்தினர்.

எமக்கு அரசியல் இலாபம் அவசியமில்லை. எப்படியும் இந்த அரசாங்கம் முடிவுக்கு வந்து விட்டது. சரியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது அவசியம்.

52 நாள் திருட்டு அரசாங்கத்தை விரட்டிய பின்னர் மூன்று நாட்களில் மாவனெல்லையில் புத்தர் சிலை உடைக்கப்பட்டது.

ஈஸ்டர் தாக்குதல் சதித்திட்டம் இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல கூறியிருந்தார்.

பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட போது சர்வதேச விசாரணைகளை நடத்துவதாக ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

உடனடியாக அந்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்-என்றார்.

(அ)

# தோல்வியடைந்த ராஜபக்ஷவினர் மீண்டும் ஆட்சிக்கு வர இனவாதத்தைத் தூண்டினர்!

## சமிந்த விஜேசிறி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 23

கடந்த 2015 ஆம் ஆண்டு ராஜபக்ஷவினர் தோல்வியடைந்த பின்னர், மீண்டும் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்காக இனவாதத்தைத் தூண்டினர் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சனல் 4 தொலைக்காட்சியின் ஆவணப்படம் தொடர்பான விவாதத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அன்று 2015 ஆம் ஆண்டு ராஜபக்ஷவினர் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். மீண்டும் அவர்களை கொண்டு வர இனவாதத்தை பரப்பினர்.

இதன் பிரதிபலனாகவே மொட்டுக்கட்சி ஆட்சிக்கு வந்தது. ஈஸ்டர் தாக்குதல் நடந்து 7 நாட்கள் கடந்து செல்லும் முன்னர் நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என கோட்டாபய கூறினார்.

அவரது இந்த அறிவிப்பு மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக உன்னிப்பாக அவதானிக்க வேண்டும்.

ராஜபக்ஷவினர் தோல்வியடைந்த சகல சந்தர்ப்பங்களிலும் மீண்டும் பதவிக்கு வர பல்வேறு தந்திரங்களை கையாள்கின்றனர். தற்போது மீண்டும் ஆட்சிக்கு வர ரணில் விக்ரமசிங்க மூலம் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளனர்-என்றார்.

# இந்த வருடம் இதுவரை 16,939 வாகன விபத்துகள்

கொழும்பு, செப். 23

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 16 ஆயிரத்து 939 வாகன விபத்துகள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஆயிரத்து 561 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வீதி விபத்துக்களில் சிக்குண்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 652ஆக பதிவாகியுள்ளது.

அவற்றுள் பெரும்பாலானவை உந்துருளி விபத்துக்களே என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விபத்துக்களால், 4 ஆயிரத்து 149 பேர் காயமடைந்ததாக அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

(அ)

# சு.க. பொதுச் செயலாளருக்கு எதிரான தடையுத்தரவு நீடிப்பு

கொழும்பு, செப். 23

சுதந்திரக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள சரத் ஏக்கநாயக்க அந்த பதவியில் செயற்படுவதை இடைநிறுத்தி விடுக்கப்பட்டுள்ள உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டுள்ளது.

கட்சியின் அங்கத்துவம் மற்றும் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்க கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன எடுத்த தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி தயாசிறி ஜயசேகர தொடர்ந்துள்ள வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான இந்த உத்தரவை பிறப்பித்தார்.

தடையுத்தரவு நீடிக்கப்படுவதை தாம் எதிர்ப்பதாக கூறி மைத்திரிபால சிறிசேன சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா வாதங்களை முன்வைத்தார்.

இதனையடுத்து எதிர்வாதங்களுக்கு உட்பட்டு தடையுத்தரவை ஒக்ரோபர் 6 ஆம் திகதி வரை நீடித்து நீதிபதி உத்தரவிட்டார்.

(அ)

# நாட்டில் பணவீக்கம் 62 வீதத்தால் குறைவு

கொழும்பு, செப். 23

பல்வேறு புதிய சீர்திருத்தங்களுடன் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னெடுத்து வரும் வலுவான வேலைத்திட்டத்தின் காரணமாக, கடந்த ஒரு வருடத்தில் நாட்டில் பணவீக்கம் 62.1 சதவீதத்தினால் குறைந்துள்ளதாக பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டின் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளில் 66.7 சதவீதமாக இருந்த பணவீக்கத்தை 2023ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 4.6 சதவீதம் வரை, குறைக்க முடிந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.



1.8 பில்லியன் டொலர்களாக இருந்த நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பை, கடந்த ஓராண்டில், 3.8 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பதற்கு முடிந்துள்ளது.

2022ஆம் ஆண்டு 14 சதவீதமாக இருந்த வங்கி வைப்பு வட்டி விகிதம் தற்போது 11 சதவீதமாகக் குறைந்துள்ளதுடன், 15.5 சதவீதமாக இருந்த கடன் வட்டி விகிதத்தை, இந்த ஆண்டு 12 சதவீதம் வரை குறைக்க முடிந்துள்ளதாக பதில் நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார்.

(அ)

# ஒரு வருடத்தில் 50 வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்ட சுகாதார அமைச்சு அதிகாரிகள்

கொழும்பு, செப். 23

சுகாதார அமைச்சர் மற்றும் அந்த அமைச்சின் அதிகாரிகள் ஒரு வருட காலப்பகுதியில் 50 வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டுள்ளதாக சுகாதார அமைச்சின் சர்வதேச சுகாதார பிரிவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் தெரியவந்துள்ளது.

சுகாதார அமைச்சின் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் எஸ். சிறீதரனால் குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் சட்டத்தின் மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஐந்து வெளிநாட்டுப் பயணங்களையும், சுகாதாரச் செயலாளர் ஜனக சிறீ சந்திரகுப்தா இரு வெளிநாட்டுப் பயணங்களையும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தனவும் நான்கு வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட முகவர் நிலையங்கள் விடுத்த அழைப்பின் பிரகாரம் அவர்கள் இந்த வெளிநாட்டு பயணங்களில் ஈடுபட்டுள்ளதாகவும், விமான ரிக்கெட்டுகள், உணவு மற்றும் தங்குமிட வசதிகளுக்கான செலவுகளை அந்த நிறுவனங்களே செய்து கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சுகாதார அமைச்சின் சர்வதேச சுகாதாரப் பிரிவு இந்த வைத்தியர்களுக்கு வெளிநாட்டு கடமை விடுப்புக்கு அனுமதி வழங்கியுள்ளதுடன், அவர்களுக்கு சாதாரண கொடுப்பனவையும் வழங்க அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# செயற்கை முட்டைகள் இலங்கையில் இல்லை

கொழும்பு, செப். 23

நுகர்வோர் சேவைகள் அதிகார சபை செயற்கையான கோழி முட்டை சம்பந்தமாக அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

செயற்கை கோழி முட்டைகள் புழக்கத்தில் இருப்பது பொய்யானது என நுகர்வோர் சேவைகள் அதிகார சபை கூறியுள்ளது.

இதன் காரணமாக முட்டைகளை பயன்படுத்துவது குறித்து அச்சம் கொள்ள வேண்டாம் எனவும் அதிகார சபை பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிளாஸ்ரிக் அரிசி தொடர்பாக பரவிய வதந்தி போல் இதுவும் அதற்கு இணையான பொய்ப் பிரசாரம் என்பதால், அதனை நம்பி ஏமாற வேண்டாம் எனவும் அதிகார சபை மக்களிடம் கேட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் செயற்கை முட்டைகள் மாத்திரமல்லாது உணவுகளை பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகள் இல்லை.

எவ்வாறாயினும் அப்படியான சம்பவங்கள் நடைபெற்றால், 1977 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புக் கொண்டு நுகர்வோர் சேவைகள் அதிகார சபைக்கு அறிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

(அ)

# கிழக்கு மாகாணத்தில் சர்வதேச சுற்றுலா வாரம்

## உணவு திருவிழாவுக்கும் ஏற்பாடு

திருமலை, செப். 23

கிழக்கு மாாணத்தில் சுற்றுலா பணியகத்தால் இம்மாதம் 27ஆம் திகதி முதல் ஒக்ரோபர் முதலாம் திகதிவரை சுற்றுலா தினம் கொண்டாடப்பட உள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஆலோசனையின் பிரகாரம், மாகாண விளையாட்டு மற்றும் கலாசார திணைக்களத்துடன் இணைந்து சுற்றுலா பணியகத்தால் சர்வதேச சுற்றுலா தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.



எதிர்வரும் 27ஆம் திகதி முதல் ஒக்டோபர் முதலாம் திகதிவரை நடைபெறவுள்ள சுற்றுலா வாரத்தில் பல்வேறு கலாசார மற்றும் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற உள்ளன.

திருகோணமலை டச்பே கடற்கரையில் உணவு திருவிழா, இசை நிகழ்ச்சி, பட்டம் திருவிழா, கடற்கரை கபடி, கடற்கரை காற்பந்து, கடற்கரை கரபந்து, கார்னிவேல், மரதன் போன்ற பிரமாண்ட நிகழ்வுகள் இடம் பெறுகின்றதோடு, விசேடமாக சிறுவர் தினத்தன்று சிறுவர்களுக்கான விசேட நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன.

பல்வேறு நாடுகளில் இருந்து முக்கிய அதிதிகளும் சுற்றுலாப் பயணிகளும் இந்நிகழ்வில் கலந்துகொள்ள உள்ளனர். (அ)




# பெரெண்டினா நிறுவனத்தினால் வாழ்வாதார உதவிகள் வழங்கல்

அம்பாறை, செப். 23

பெரெண்டினா நிறுவனத்தினால் வாடிக்கையாளர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கும் “உங்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பும் “ லைப் லைன்” நிகழ்வு கல்முனை கிளையின் ஏற்பாட்டில் நாவிதன்வெளி பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு நாவிதன்வெளி உதவி பிரதேச செயலாளர் பி. பிரணவருபன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்ததுடன், வாடிக்கையாளர்களுக்கான வாழ்வாதார உதவி கொடுப்பனவினையும் வழங்கினார்.

பெரெண்டினா தன்னார்வ மற்றும் நிதி நிறுவனத்தின் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்து வதற்கான பல்வேறு செயற்திட்டங்கள் மாவட்டத்தில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் மாவட்டத்தில் போசாக்கு குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு பல்வேறு செயற்றிட்டம் பெரெண்டினா நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலயம் மாகாண மெய்வல்லுநர் போட்டியில் சாதனை




மட்டக்களப்பு, செப். 23

கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மாகாண மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலய மாணவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

800 மீற்றர், 5000 மீற்றர் போட்டிகளில் முறையே எஸ். விதுஷன், தி.ருக்சன் ஆகிய மாணவர்கள் 3 ஆம், 4 ஆம் இடங்களைப் பெற்று சாதனை புரிந்துள்ளதாக பாடசாலையின் அதிபர் ஆ.புட்கரன் தெரிவித்தார். (அ)

# மட்டக்களப்பு காந்தி பூங்காவில் கிழக்கின் ஓவியத் திருவிழா

மட்டக்களப்பு, செப். 23

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவனமும் இணைந்து நடாத்தும் கிழக்கின் ஓவியத்திருவிழா 2023 நேற்று முன் தினம் சிறப்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

23 ஆம் திகதி வரை மூன்று நாட்களாக நடைபெறவுள்ள ஓவியத் திருவிழா கண்காட்சியானது மட்டக்களப்பு காந்தி பூங்காவில் காலை 9.00 மணி முதல் மலை 6.00 மணிவரை நடைபெறவுள்ளது.

அதிதிகளுக்கு மலர்மாலை அணிவித்து வரவேற்பளிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, ஓவியத் திருவிழா கண்காட்சி அதிதிகளினால் நாடா வெட்டி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.



நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் மற்றும் சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடி ஆகியோர் கலந்து சிறப்பித்த நிகழ்விற்கு சிறப்பு அதிதிகளாக பல்கலைக்கழக பேராசிரியர்கள், சிரேஸ்ட விரிவுரையாளர்கள், மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தர் றீ.மலர் செல்வன் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (அ)

# முன்னாள் ஆணையாளர், கணக்காளரை தொடர்ந்தும் மறியலில் வைக்க உத்தரவு

அம்பாறை, செப். 23

கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைதான முன்னாள் ஆணையாளரை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 04 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு கடந்த புதன் கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குற்றப்புலனாய்வு பிரிவினர் மற்றும் பிரதிவாதிகள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகளின் விண்ணப்பங்களை ஆராய்ந்த நீதிவான், கைதான முன்னாள் ஆணையாளர் மற்றும் முன்னாள் கணக்காளரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் ஏற்கனவே குறித்த வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 3 மற்றும் 4 ஆம் சந்தேக நபர்களான மாநகர சபை சிற்றூழியர்கள் பல்வேறு நிபந்தனையின் கீழ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் குற்றப்புலனாய்வு பிரிவினர் மன்றிற்கு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வர் சட்டத்தரணி அபூபக்கர் றகீப்பிற்கு வெளிநாடு செல்வதற்கு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

# மட்டக்களப்பில் சர்வதேச கரையோர பாதுகாப்பு, தூய்மைப்படுத்தல் நிகழ்வு



மட்டக்களப்பு, செப். 23

மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலகம், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் சர்வதேச கரையோர பாதுகாப்பு மற்றும் தூய்மைப்படுத்தல் நடவடிக்கைகள் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வு மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் ந.சத்தியானந்தி தலைமையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் புதுக்கு டியிருப்பு பிரதேசக் கடற்கரை யில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு வடக்கு மற்றும் தெற்கு ஆகிய பிரிவுகளின் கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொருளாதார, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூகமட்ட குழுக்கள் மற்றும் பிரதேச மக்கள் என 300 இற்கும் மேற்பட்டோர் பங்குபற்றினர்.

இதன்போது கடற்கரையில் பரவிக் காணப்பட்ட பெருந்தொகை பிளாஸ்டிக் கழிவுகள் ஒன்று சேர்க்கப்பட்டு, அகற்றப்பட்டதுடன் கரையோரம் சுத்தப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் ஜனவரி பாராளுமன்றத் தேர்தல்

## பிரதமரின் பரிந்துரையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி

இஸ்லாமாபாத், செப். 23

பாகிஸ்தானில் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பாராளுமன்ற பொதுத் தேர்தல் நடைபெறும் என பாகிஸ்தான் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் கடந்த ஒகஸ்ட் 14 ஆம் திகதி முடிவடையவிருந்த நிலையில், அதற்கு முன்னரே பாராளுமன்றத்தை கலைக்குமாறு பிரதமர் ஷாபாஸ் ஷெரீப், ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் கோரியிருந்தார்.




பிரதமரின் பரிந்துரையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ஆரிப் ஆல்வி கடந்த ஒகஸ்ட் 9 ஆம் திகதி இரவு பாராளுமன்றத்தை கலைக்கும் உத்தரவை பிறப்பித்தார்.

பாராளுமன்ற பதவி காலம் முடியும் கலைக்கப்பட்டதை அடுத்து 90 நாட்களுக்குள் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இதனடிப்படையில் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இறுதி வாரத்தில் பொதுத் தேர்தல் நடைபெறும் என பாகிஸ்தான் தேர்தல் ஆணைக்குழு வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

தொகுதிகளின் முதற்கட்டப் பட்டியல் எதிர்வரும் 27 ஆம் திகதியும் இறுதிக்கட்ட பட்டியல் எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதியும் வெளியிடப்படும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நீண்டகாலத்திற்கு பின்னர் வெளிநாட்டில் இருந்து அண்மையில் நாடு திரும்பிய பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# பிரான்ஸின் தென்கிழக்கில் கன மழை, வெள்ள அபாயம்

பாரிஸ், செப். 23

பிரான்ஸ் - தென்கிழக்கின் சில பிரதேசங்களுக்கு செம்மஞ்சள் நிற அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தென்கிழக்கு பகுதிகளில் கடும் மழை மற்றும் வெள்ள ஏற்படக்கூடுமென பிரான்ஸின் தேசிய வானிலை சேவை தெரிவித்துள்ளது.

அத்துடன், குறித்த பகுதியில் மணித்தியாலத்திற்கு 80 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக் கூடுமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் நிலவிவரும் கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக பல்வேறு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

குறித்த பகுதியில் போக்குவரத்து தடைப்பட்டதுடன், மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து வெளியேற்றப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காலநிலை மாற்றத்தால் பிரான்ஸ் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

பிரான்ஸில் சில பிரதேசங்களுக்கு கடந்த மாதம் வெப்ப சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது மழை மற்றும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பிரான்ஸ மக்கள் பொருளாதார ரீதியில் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

மேலும், பிரான்ஸில் தண்ணீருக்கான தேவையும் எதிர்காலத்தில் மிகப்பாரிய பிரச்னைகளில் ஒன்றாக இருக்குமென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ)

# ஈரானில் பெண்கள் ஹிஜாப் அணியாவிடில் 10 வருட சிறை



தெஹ்ரான், செப். 23

ஈரானில் பெண்கள் அணியும் ஆடைகள் தொடர்பான கட்டுப்பாட்டை மீறினால் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கும் வகையில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈரானில் பெண்கள் வெளியில் செல்லும் போது ஹிஜாப் அணிய வேண்டியது கட்டாயம் எனினும் ஹிஜாப் அணிவது கட்டாயம் என்ற விதிமுறைக்கு எதிராக பெண்கள் அமைப்புகள் குரல் எழுப்பி வருகின்றன.

கடந்த ஆண்டு ஹிஜாப் அணியாமல் வெளியில் சென்ற இளம் பெண் ஒருவர் காணாமல் போன நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இதனையடுத்து ஈரானில் போராட்டங்கள் வெடித்ததுடன் பலர் கைது செய்யப்பட்டு தண்டனைக்குட்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் ஈரான் அரசாங்கம் பெண்கள் அணியும் ஆடைகள் தொடர்பான கட்டுப்பாட்டு சட்டமூலத்தை நிறைவேற்றியுள்ளது.

இந்த சட்டமூலத்திற்கு அமைய ஈரானில் பொது இடங்களில் பெண்கள் ஹிஜாப் அணியாமல் சென்றால் 5 முதல் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும், அத்துடன் பெருந்தொகை அபராதமும் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அமெரிக்க ஜனாதிபதி பைடனை சந்தித்தார் உக்ரைனிய ஜனாதிபதி

நியூயோர்க், செப். 23

அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள உக்ரைனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, அந்த நாட்டு ஜனாதிபதி ஜோ பைடனை சந்தித்து கலந்துரையாடினார்.

ரஷ்யாவுடன் போர் ஆரம்பித்த பின்னர், அமெரிக்காவுக்கு ஜெலென்ஸ்கி மேற்கொள்ளும் இரண்டாவது பயணம் இது.

ஆனால் இந்த பயணத்தில் உயர்மட்ட ஜனநாயகக் கட்சியினர் உக்ரைனுடன் நிற்பதாக உறுதியளித்த போதிலும், தனது முதல் பயணத்தைப் போலல்லாமல், பெரிய உதவிப் பொதிகளுடன் போர் முயற்சிக்கு ஆதரவளிக்க விரும்பாத காங்கிரஸை ஜெலென்ஸ்கி எதிர்கொண்டார்.

வியாழன் அன்று வெள்ளை மாளிகை அமைச்சரவை முன் சுருக்கமான பொதுக் கருத்துக்களில், ஜெலென்ஸ்கி வாஷிங்டனில் தனது பேச்சுவார்த்தைகளை "உற்பத்தி" மற்றும் "வலுவானது" என்று அழைத்தார்.

வியாழனன்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் அறிவித்த 128 மில்லியன் டொலர் மதிப்புள்ள புதிய இராணுவ உதவியையும் அவர் எடுத்துரைத்தார்.

"எங்கள் வீரர்களுக்கு இப்போது என்ன தேவையோ அது சரியாக உள்ளது," என்று அவர் கூறினார், அதை "மிகவும் சக்தி



வாய்ந்த தொகுப்பு" என்று அழைத்தார்.

"இன்று, உக்ரைனுக்கான அமெரிக்க பாதுகாப்பு உதவியின் அடுத்த தவணைக்கு நான் ஒப்புதல் அளித்தேன். இதில் அதிக பீரங்கி, அதிக வெடிமருந்துகள், அதிக டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் உள்ளன," என்று பைடன் கூறினார்.

"அடுத்த வாரம், முதல் அமெரிக்க ஆப்ராம்ஸ் டாங்கிகள் உக்ரைனுக்கு வழங்கப்படும்." என்றார் அவர்.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பிடென், உக்ரைனுக்கான நிதி உதவி வழங்குவதில், அமெரிக்க காங்கிரஸில் நெருக்கடியை எதிர்கொள்கிறார். நிதி உதவிக்கு காங்கிரஸ் அனுமதியளிக்காத நிலையில், தனது ஜனாதிபதியின் "டிராடவுன் அதிகாரத்தை" பயன்படுத்தியே தற்போது உதவி வழங்கப்பட்டு வருகிறது.

2022 இல் போர் தொடங்கியதில் இருந்து, உக்ரைனுக்கு எந்த ஒரு நாட்டையும் விட அதிகமான பணத்தை அமெரிக்கா வழங்கியுள்ளது. (அ)

# கைது செய்யும் அதிகாரத்தை பிறரின் தேவைக்காகப் பயன்படுத்தக்கூடாது!

## தமிழ் வர்த்தகரை கைது செய்த சி.ஐ.டி அதிகாரிகள் நட்டஈடு வழங்க உத்தரவிட்டது உயர்நீதிமன்றம்

**கொழும்பு, செப். 23**

**குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (சி.ஐ.டி) சிறப்புப் புலனாய்வுப் பிரிவினர் நிதிப் பரிவர்த்தனை தொடர்பான பொய்ப் புகாரின் பேரில் ஒருவரைக் கைது செய்து சிறையில் அடைத்ததன் மூலம் அடிப்படை உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.**

**இதன்படி, பொய்யான முறைப்பாட்டைத் தாக்கல் செய்த நபரான பமுனுவில, கோனவல யைச் சேர்ந்த சவின் சதுரங்க என்பவருக்கு பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 300,000 ரூபா நட்டஈடு வழங்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.**

கைது செய்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் எம்.எம்.ஜே.மாரசிங்கவுக்கு ரூபா 75,000 வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இன்ஸ்பெக்டர் ஏ.எஸ்.சுதசிங்க மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் எச்.ஜி.சி.பி.பிரிய தர்ஷன ஆகியோர் தனித்தனியாக ரூ. தலா 25,000 செலுத்த வேண்டும்.

கொழும்பு 5 ஐச் சேர்ந்த கணேசன் சாம்சன் றோய் என்ற நபர் தனிப்பட்ட நிதி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பொய்யான முறைப்பாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டதன் மூலம் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி எம். எம்.ஜே.மாரசிங்க, முறைப்பாட்டாளர் பி.சி.சவின் சதுரங்க, பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்ட 8 பேர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுவை பரிசீலித்த உயர் நீதிமன்ற நீதிபதிகளான ஏ.எச்.எம்.டி.நவாஸ் மற்றும் மகிந்த சமயவர்தன ஆகியோரின் அங்கீகாரத்துடன் உயர் நீதிமன்ற நீதிபதி புவனேக அலுவிஹாரே ஏகமனதாக தீர்மானத்தை அறிவித்தார்.

முறைப்பாட்டின் உண்மை அல்லது பொய்யை விசாரிக்காமல் பொறுப்புள்ள பொலிஸ் அதிகாரிகள் மனுதாரரை கைது செய்துள்ளதாகவும், யாரோ ஒருவரின் குறுகிய நோக்கங்களை நிறைவேற்ற நீதியின் பொறிமுறையை இயக்கக்கூடாது என்றும் தீர்ப்பு காட்டுகிறது.

ஒருவரைக் கைது செய்யும் பொலிஸாரின் அதிகாரத்தை இதுபோன்ற குறுகிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தக் கூடாது என்றும், அதன் மூலம் சட்டத்தின் ஆட்சி மீறப்படுவதோடு, சட்டச் செயல்பாட்டின் மீதான மக்களின் நம்பிக்கையும் சிதைந்துவிடும் என்பதை இந்தத் தீர்ப்பு உணர்த்தியுள்ளது.

இரண்டு பி.எம்.டபிள்யூ கார்களை இறக்குமதி செய்வதற்காக செய்து கொள்ளப்பட்ட நிதி ஒப்பந்தத்தின்படி மனுதாரர் செயல்படவில்லை என சவின் சதுரங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் 2018 ஜூலை முதலாம் திகதி தாக்கல் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில், பிரதிவாதி பொலிஸ் அதிகாரிகள் மனுதாரரை 2019 பெப்ரவரி மாதம் முதலாம் திகதி கைது செய்தனர். வத்தளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், அவர் 8 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக அளிக்கப்பட்ட முறைப்பாடு தவறானது என விசாரணையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மனுதாரர் குறித்த உண்மைகளை சரிபார்க்காமல் பதில் அளித்த பொலிஸ் அதிகாரிகள் கைது செய்துள்ளதாக நீதியரசர்கள் குழு சுட்டிக்காட்டியது.

ஒருவரை கைது செய்ய பொலிஸ்துறைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை தன்னிச்சையாக பயன்படுத்த முடியாது என உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. முறைப்பாடு அளித்து ஐந்து மாதங்களுக்குப் பிறகு பொலிஸார் மனுதாரரை கைது செய்ததாக நீதியரசர்கள் குழு சுட்டிக்காட்டியது. புகார் குறித்து முறையான விசாரணை நடத்தப் போதுமான அவகாசம் இருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

உண்மை அல்லது பொய்களை சரிபார்க்காமல் சம்பந்தப்பட்ட நபரை கைது செய்ததன் மூலம் அந்த நபரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பெஞ்ச் தீர்ப்பளித்துள்ளது. அரசியலமைப்பின் 13(2) பிரிவு 12(1) மற்றும் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளது என்று நீதியரசர்கள் குழு முடிவு செய்தது.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணி சேனானி தயாரத்னவும், பிரதிவாதிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி இந்துனில் புஞ்சிஹேவாவும் ஆஜராகியிருந்தனர்.

(அ)

# சர்வதேச கண்காணிப்புடன் விசாரணை நடக்கவேண்டும்

## ரவூப் ஹக்கீம் வலியுறுத்து

கொழும்பு, செப். 23

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். எனவே, சர்வதேச கண்காணிப்புடன் விசாரணையொன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார் முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தற்போதைய தேசிய பாதுகாப்பு தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பல மர்மங்கள் உள்ளன. விசாரணைகள் தொடர்பிலும் சர்ச்சைகள் உள்ளன. புலனாய்வு பிரிவு செயற்பட்டுள்ள விதம் குறித்தும் சந்தேகம் உள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டுமெனில் உண்மை கண்டறியப்படவேண்டும்.

பாராளுமன்ற தெரிவுக்குழுக்களை அமைத்து காலத்தை இழுத்தடிக்கக்கூடாது. சர்வதேச கண்காணிப்புடன் விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும். அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது. ஆகவே, மேற்படி தாக்குதல் சம்பவத்தின் பின்புலம் கண்டறியப்பட வேண்டும். அதற்குத்தான் நாம் தயாராக வேண்டும்-என்றார்.

(அ)

# உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக கையளிக்கப்பட்ட வேட்புமனு ரத்து?

கொழும்பு, செப். 23

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலுக்காக கையளிக்கப்பட்டுள்ள வேட்புமனுக்களை இரத்து செய்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு ஆலோசனைக் குழு கூட்டத்திலேயே இது தொடர்பில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

(அ)

# துன்னாலைப் பகுதியில் இரு குழுக்கள் மோதல்!

## இரண்டு பேர் காயம்

யாழ்ப்பாணம், செப். 23

துன்னாலை பகுதியில் நேற்று முன்தினம் இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இரு குழுக்களுக்கு இடையில் நீண்ட காலமாக மோதல் போக்கு காணப்பட்டு வந்துள்ள நிலையிலேயே நேற்று முன் தினம் இரவு மோதல் வெடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மோதலின் போது காயமடைந்த இருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ-2)

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் ஆதாரங்கள் பொதுமக்களுக்கு காண்பிக்கப்படாதாம்!

கொழும்பு, செப். 23

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான இரகசிய ஆதாரக் குறிப்புகளை, சாட்சியங்களை உருவாக்கிய நபர்களின் தனியுரிமையைப் பாதுகாப்பதற்காக பொதுமக்களுக்குத் திறக்க முடியாது. தகவல்களை பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் மட்டுமே அணுக முடியும் என ஜனாதிபதியின் செயலாளர் மீண்டும் ஒரு கடிதம் மூலம் சபாநாயகருக்கு அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் செப்ரெம்பர் 12 ஆம் திகதி அனுப்பிய கடிதத்தில் இதனைத் தெரிவித்ததாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட சாட்சிகளின் அடையாளத்தை பாதுகாப்பதற்காக அவ்வாறு செய்யவேண்டும் என ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்துள்ளதாகவும் சபாநாயகர் கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் விசேட அறிக்கையொன்றை வெளியிடும் போதே சபாநாயகர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் இரகசிய ஆவணங்கள் பொதுமக்களுக்கு திறக்கப்படாமை தொடர்பில் சில இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் தவறான தகவல்களை பரப்பி வருவதாக சபாநாயகர் தெரிவித்தார்.

எனினும், இந்த நடவடிக்கை விசாரணையை மூடிமறைக்கும் செயற்பாடா என எதிர்க்கட்சித் தலைவர் கேள்வியெழுப்பியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(அ)

# தெல்லிப்பழை யூஸ் உற்பத்தி நிலையத்துக்கு அபராதம்!

## விநியோகிக்கப்பட்ட யூஸ் பைக்கெற்களை மீளப்பெற்று அழிக்க நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், செப். 23

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் கடந்த இரு வாரங்களாக மேற்கொண்ட பரிசோதனைகளில் நீண்ட கால காலாவதித் திகதியுடனான யூஸ்கள் மற்றும் காலாவதி திகதி முடிவுற்ற-பாவனைக்கு உதவாத உணவுப்பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த அறு வருக்கு மொத்தமாக ரூ.210 000 தண்டம் விதிக்கப்பட்டது.

குறிப்பாக பிரதேசத்திலுள்ள யூஸ் உற்பத்தி நிலையம் ஒன்றில் ஒரு வருட காலப்பகுதியும் குறித்த காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட அனைத்து பைக்கெற்றுகளிலும் முன்கூட்டியே அச்சிடப்பட்ட ஒரே உற்பத்தி முடிவு திகதியும் இடப்பட்டு தயாரிக்கப்பட்ட யூஸ் உற்பத்தி நிலையத்தில் 16 குளிரூட்டிகளில் களஞ்சியப்படுத்தப்பட்ட அனைத்து யூஸ்களையும் அழிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன் யாழ். மாவட்டத்தின் இதர பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்ட சகல யூஸ்களையும் மீளப்பெற்று அழிக்குமாறு மல்லாகம் நீதிமன்று பணித்துள்ளது.

அளவெட்டி, தெல்லிப்பழை, மாவிட்டபுரம், மல்லாகம் கீரிமலை பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் சுகாதாரவைத்திய அதிகாரி,மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி, மேற்பார்வை பொது சாகாதார பரிசோதகர் வழிகாட்டலில் மேற்படி வழக்குகளை நேற்று முன்தினம் தாக்கல் செய்தது குறிப்பிடத்தக்கது.

இதே போன்று குழந்தைகள் பருகும் ஒரு சில வாரங்களே காலவதி திகதி இடக்கூடிய பைக்கெற் யூஸ்கள் ஒரு வருட காலப்பகுதியுடன் குறித்த காலப்பகுதி முழுமைக்கும் ஒரே உற்பத்தி முடிவு திகதிகள் இடப்பட்டு பரவலாக குடாநாட்டின் பல இடங்களில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் குழந்தைகளுக்கு தொற்று நோய்கள் ஏற்படும் அபாய நிலை சுட்டிகாட்டப்படுகின்றது.

(அ)

# சீனாவின் ஷின் யான் கப்பல் இன்று இலங்கை வருகின்றது?

கொழும்பு, செப். 23

சீனாவின் ஷின் யான் 6 என்ற கப்பல் நாளை 23ஆம் திகதி இலங்கை வரவுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தக் கப்பல் மூலம் 750 கி.மீ. தூரம் வரையிலான இடங்களைக் கண்காணிக்க முடியும். இதன்படி இந்தியாவின் சிறீ ஹரிகோட்டா விண்கல ஏவுதளம், கல்பாக்கம் அணுமின் நிலையம், கூடங்குளம் அணுமின் நிலையம் மற்றும் இந்தியாவின் தென் மாநிலங்களில் அமைந்திருக்கும் 6 கடற்படைத் தளங்களை இந்தக் கப்பல் மூலம் உளவு பார்க்க வாய்ப்புள்ளது. இதனால், சீன கப்பல்களின் வருகைக்கு இந்தியா கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

எனினும், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் அடுத்தடுத்து சீன உளவு கப்பல்களுக்கு இலங்கை அரசு அனுமதி வழங்கி வருகிறது. ஏற்கனவே இலங்கைக்கு 2 நாட்கள் பயணம் மேற்கொள்ள இருந்த இந்திய பாதுகாப்பு மந்திரி ராஜ்நாத் சிங் கடைசி நேரத்தில் அதனை இரத்து செய்திருந்தார்.

சீன உளவு கப்பலுக்கான அனுமதியை இலங்கை வழங்கினால் பதற்றமான நிலைமைகள் உருவாகும் என இலங்கையில் உள்ள நடுநிலையாளர்கள், இந்திய ஆய்வாளர்கள் கருத்துகளை வெளியிட்டுள்ளனர்.

இலங்கையின் ருகுணு பல்கலைக்கழகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி, இந்த கப்பல் இலங்கைக்கு வருகிறது என்று நாரா எனப்படும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நீர் மாதிரிகளை எடுப்பதற்காக தமது நிறுவனம் இந்த கப்பலுடன் பணியில் ஈடுபடும் என்றும் நாரா நிறுவனம் தெரிவித்திருந்தது. எனினும் இதுவரை இந்த கப்பல் வருவதற்கான அனுமதி கிடைக்கவில்லை என்று ருகுணு பல்கலைக்கழகத்தின் கடல்சார் தொழில்நுட்ப துறை தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இந்த உளவு கப்பல் கடந்த ஆண்டு ஏப்ரல் 20ஆம் திகதி இலங்கைக்கு வந்ததோடு, 10 நாட்கள் இலங்கை கடற்பரப்பில் நிறுத்தப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குறைந்த வருமானமுடையோருக்கு 25 ஆயிரம் வீடுகள் வழங்க திட்டம்!

### வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 23

வடக்கு மாகாணத்தில் நிரந்தர வீடுகள் இல்லாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 25 ஆயிரம் நிரந்தர வீடுகளை கட்டிக்கொடுக்கும் விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் பணிமனையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

வடக்கின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் குறைந்த வருமானம் கொண்ட நிரந்தர வீடற்ற குடும்பங்களை இனங்கண்டு வீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு இதன்போது ஆளுநர் பணித்தார்.

நிரந்தர வீடமைப்புத் திட்டத்தில் உட்கட்டமைப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறும், மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடங்களை உடனடியாகக் கண்டறிந்து அதற்கான திட்டங்களைத் தயாரித்து தம்மிடம் ஒப்படைக்குமாறும் இதன்போது ஆளுநர் குறிப்பிட்டார்.

நிரந்தர வீடொன்றை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் 50 இலட்சம் ரூபாயை செலவிடவுள்ளது. அத்துடன், இந்த வீடுகளில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் பெறுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் என்றும் இதன்போது ஆளுநர் குறிப்பிட்டார். (ஐ)

## குளியலறையில் வழுக்கி விழுந்து பல்கலைக்கழக மாணவன் பலி!

கொழும்பு, செப். 23

குளியலறையில் வழுக்கி விழுந்து பேராதனை பல்கலைக்கழக மாணவன் ஒருவர் உயிரிழந்தார்.

மன்னாரை சேர்ந்த 23 வயது மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் பல் மருத்துவ பீடத்தில் முதலாம் ஆண்டில் கல்வி கற்று வந்தார் என்று தெரிய வருகின்றது.

உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர், அவரின் அறையின் குளியலறையில் விழுந்துள்ள நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பேராதனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னரே மாணவன் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 33வருடங்களின்...

நேற்றைய தினம் மக்கள் இந்த ஆலயத்துக்கு செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதிளித்திருந்தனர்.

இதைத் தொடர்ந்து நேற்று ஆலயத்தை சென்று பார்வையிட்ட நிர்வாகத்தினர், சைவ குருமார்கள் பூசை மற்றும் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

ஆலய நிர்வாகத்தினர் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அவர் எடுத்த முயற்சியின் பலனாகவே ஆலயத்துக்கு செல்வதற்கு படையினர் அனுமதி அளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-03)

## மகிந்த...

இரகசியமான விடயமில்லை.

ராஜபக்ஷ நிர்வாகத்திடமும் இறுதிப் போரை வழிநடத்திய இராணுவத்திடமும் நாங்கள் ஆயுதங்களையும் பணத்தையும் பெற்றோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த சர்வதேச விசாரணைகளை எதிர் கொள்ள தயார் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## நாகர்கோயில்...

விமானப் படை நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் 21 மாணவர்கள் உட்பட 39 பேர் கொல்லப்பட்டனர்.

இவர்களின் 28ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று வெள்ளிக்கிழமை குறித்த பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், உயிரிழந்தவர்களது உறவினர்கள் மற்றும் பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ-02)

## திரும்பவும்...

- உள்ளீடுகளை - நெருக்கடிகளை வேண்டி நடவடிக்கை எடுத்தால் என்ன என்ற கேள்வியை எங்களுடைய தலைவர்களுக்கு விடுத்திருந்தேன்.

13 கிடைக்காவிட்டால் அடுத்த கட்டம் என்னவென்று கேட்கிறீர்கள். 13 கிடைக்காவிடின் இவர்களிடம் இருந்து அடுத்து என்ன கிடைக்கப் போகின்றது. 13ஐயே மிகவும் குறைந்த ஒன்று அதே கிடைக்கவில்லை. அதுவும் இந்தியாவின் அனுசரணையின் பேரில் கிடைத்த ஒன்று அதைக்கூட அவர்கள் தட்டிக் கழித்து கொண்டு வருவார்களேயானால், திரும்பவும் பிரபாகரன் ஒருவரைக் கூட்டிக் கொண்டு வரவேண்டியதுதான். வேறு என்ன வழி எங்களுக்கு இருக்கிறது?

எல்லோரும் சொல்கிறார்கள் வெளிநாடுகளிடம் (சர்வதேசம்) போகலாம் என்று. ஆனால், அவர்கள் (சர்வதேசம்) தமிழீழத்தை தூக்கி தருவார்கள் என்று யோசிக்கக்கூடாது. எங்களுடைய பிரச்னைகளை நாங்களே தீர்க்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை 13ஐ எப்படியாவது நடைமுறைப்படுத்தி மக்களுக்கு அதிகாரத்தை பெற்றுக் கொடுத்து அந்த அதிகாரத்தின் மூலம், அடுத்தடுத்த கட்டத்துக்கு போகும் நிலையை உருவாக்குவதுதான். 13ஆவது திருத்தச் சட்டம் அதிகாரம் இல்லாத ஒன்று. அதைக் காட்டி அதிகாரம் இல்லாததால் சமஷ்டியை கேட்கிறோம் என்று உலக அரசுகளுக்கு சொல்லமுடியும். அப்போது அவர்களும் ஏதாவது செய்ய முடியும்.

சிலர் சொல்கின்றனர் 13 என்று சொன்னால் சமஷ்டி கோரிக்கை நீர்த்துப் போய்விடும் என்று. அப்படி நீர்த்துப் போகாது. ஏனெனில், மாகாண சபை வந்தவுடன் நீர்த்துப் போயிருக்க வேண்டும். இப்போது அந்தக் குரல் வலுவாகியிருக்கிறது - என்றும் அவர் கூறினார்.

விக்னேஸ்வரன் எம். பியுடனான நேர்காணலை டான் தமிழ் ஒளியில் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு முழுமையாகக் காண முடியும். (ஐ)

## திலீபன்...

இதன்போது, நினைவேந்தலின் போது வன்முறை சம்பவங்கள் இடம்பெறலாம் என்ற விடயத்தை சட்ட மா அதிபர் திணைக்களம் சுட்டிக்காட்டியது.

அவ்வாறு எவரேனும் வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டால் அவர்களை உடனடியாக பொலிஸார் கைது செய்ய முடியும் என்று தெரிவித்த நீதிமன்றம் நினைவேந்தலுக்கு தடை விதிக்க மறுத்துவிட்டது.

திலீபன் நினைவேந்தலுக்கு தடை கோரி, யாழ்ப்பாணம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட கடந்த புதன் கிழமை தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த நிலையில், நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் இருந்து சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மனிதஉரிமைகள்...

தண்டனையில் இருந்து விலகி சுதந்திரமாகவுள்ளனர். இதுவே, இலங்கை எதிர்கொள்ளும் அரசியல், சமூக நெருக்கடிக்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது. இது மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக கொள்கைகளை பின்பற்றும் அமெரிக்காவின் கொள்கைகளுக்கு எதிரான விடயமாகும்.

எனவே, அதனை தடுப்பதற்கு, அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அழுத்தத்தை வழங்கவேண்டும் - என்றும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (அ-ஐ)

## பயங்கரவாத...

முன்னிலையாகியிருந்தார். வழக்கு நீதிபதி ஆதித்ய படபாண்டிகே முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை சிவாஜிலிங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

பயங்கரவாத தடை சட்டத்தின் 27ஆவது பிரிவின் கீழ், தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினரான திலீபன் என்ற இராசையா பார்த்தீபனின் 33வது ஆண்டு நினைவேந்தலை கடந்த 2020 செப்ரெம்பர் 15ஆம் திகதி அல்லது அதற்கு அடுத்த நாள் யாழ்ப்பாணம், கோண்டாவில் கோகுல வீதியில் முன்னெடுத்தார் என்றும், 2011 ஒகஸ்ட் 29ஆம் திகதி விடுதலைப் புலிகளை தடை செய்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விதிகளை மீறினார் என்றும் சிவாஜிலிங்கத்துக்கு எதிராக குற்றங்கள் சுமத்தப்பட்டு சட்டமா அதிபர் இந்த வழக்கை 2022இல் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட 7 தவணைகளில் சிவாஜிலிங்கம் நீதிமன்றத்தில் முற்படவில்லை. அந்த சமயங்களில் அவர் இந்தியாவில் மருத்துவ சிகிச்சையில் இருந்தமைக்கான ஆவணங்கள் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், கடந்த ஒகஸ்ட் 25ஆம் திகதி நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, குற்றஞ்சாட்டப்பட்ட சிவாஜிலிங்கம் நீதிமன்றில் முன்னிலையாகாத காரணத்தால் அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிடியாணை பிறப்பித்திருந்தார்.

இதனையடுத்து, நேற்றைய தினம் சட்டத்தரணி உதார முஹந்திரத்தின் ஆலோசனையின் பேரில், ஜனாதிபதி சட்டத்தரணி றியன்சி அரசகுலரத்ன, இரட்ணவேல் ஊடாக சிவாஜிலிங்கம் நீதிமன்றில் முற்பட்டார்.

தமது கட்சிக்காரர் மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா சென்றிருந்தார் என்றும் இது குறித்து அறிந்த பின்னர் அவர் இன்று (நேற்று) நீதிமன்றத்தில் முற்பட்டார் என்றும் சட்டத்தரணிகள் நீதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

அத்துடன், சிவாஜிலிங்கத்தின் உடல்நிலையை கருத்தில் கொண்டு அவரை பிணையில் விடுவிக்க வேண்டும். அவரை விளக்கமறியலில் வைப்பது அவரின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்று சுட்டிக்காட்டிய சட்டத்தரணிகள், பயங்கரவாத தடைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் மேல் நீதிமன்ற நீதிபதி தனக்குள்ள அதிகாரத்தின்படி பிணை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

கோரிக்கைகளையும் ஆவணங்களையும் பரிசீலித்த மேல்நீதிமன்ற நீதிபதி தலா 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு சரீரப் பிணையில் சிவாஜிலிங்கம் செல்ல அனுமதித்தார்.

அத்துடன், இந்த வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் 20ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மத்திய வங்கியால்தான் நாடு தோல்வி அடைந்தது

**வஜிர அபேவர்த்தன குற்றச்சாட்டு**

கொழும்பு, செப். 23

**மத்திய வங்கி நிதி வங்குரோத்து நிலையை அறிவித்ததனால் முழு நாடும் தோல்வியடைந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.**

**அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து பாரா ளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கும், அது தொடர்பில் தமது முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு கூடியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**



நிதி வங்குரோத்து நிலை தொடர்பில் 2022 செப்ரெம்பர் 01 மற்றும் 2023 பெப்ரவரி 10 ஆம் திகதிகளில் பாரா ளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் இதன்போது வினவப்பட்டது.

அவ்வேளையில் கருத்துத் தெரிவித்த வஜிர அபேவர்தன குறிப்பிடுகையில்-

அரசியலமைப்பின் பிரகாரம் நிதிக் கட்டுப்பாடு பாராளுமன்றத்துக்கு காணப்படுகிறது. பிழையான முறையொன்றுக்கு அமைய 202.04.12 ஆம் திகதி மத்திய வங்கியினால் இந்நாட்டில் நிதி வங்குரோத்து நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. இதனால் முழு நாடும் அசௌகரியத்துக்குட்பட்டது.

விசேடமாக 2022 இல் முதலாவது காலாண்டில் 3.9 பில்லியன் டொலர் செலுத்த வேண்டி இருந்தது. 2022 ஏப்ரல் 08 இல் 3.2 பில்லியன் டொலர் செலுத்தியிருந்தது.

அதற்கமைய, ஏப்ரல் 12 வரை சுமார் 70 மில்லியன் டொலர் சீனாவுக்கு செலுத்தவேண்டி இருந்தது. இந்த நிலையில், ஏப்ரல் 12 இல் எந்தவொரு விவரமும் இல்லாமல் மத்திய வங்கியினால் நிதி வங்குரோத்து நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. இது பிழையான செயற்பாடு. இது நடந்திருக்கக்கூடாது. அந்த நிலையில் தனியாரின் உதவியுடன் அந்தக் கடனைச் செலுத்த முடியுமாக இருந்தது.

இதனால், நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு மத்திய வங்கியின் அதிகளவான அதிகாரிகள் பொறுப்புக் கூற வேண்டும் - என்றார். (அ)

## சர்வதேச விசாரணைக்கு முன் சாட்சியமளிப்பதற்கு தயார்!

**ஆசாத் மௌலானா அறிவிப்பு**

கொழும்பு, செப். 23

ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு முன்பாக சாட்சியமளிக்கத் தாம் தயார் என தகவலாளர் ஆசாத் மௌலானா அறிவித்துள்ளார்.

ஜெனிவாவில் அறிக்கையொன்றை வெளியிட்ட மௌலானா, சுயாதீன விசாரணை ஒன்றில் தாம் சாட்சியமளிக்க தயாராக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய சனல் 4 தொலைகாட்சி மூலம் செப்ரெம்பர் 5 ஆம் திகதி ஒளிபரப்பப்பட்ட "இலங்கையின் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகள்" என்ற ஆவணப்படம் இலங்கையில் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் இந்த ஆவணப்படம் ஒரு சர்வதேச சுயாதீன விசாரணைக்கு ஆதரவை உருவாக்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் நிறைய வதந்திகள் மற்றும் போலிச் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

அத்துடன் தமது மனைவி மற்றும் குழந்தைகளைக் கூட அவதூறு செய்து சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் மௌலானா கூறினார்.

தாம் பிள்ளையான் என்ற சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் பணியாற்றியபோதும், தாம் ஆயுத பயிற்சி பெற்ற போராளி அல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாகவே ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பல அரசியல் கொலைகள் தொடர்பான முக்கியமான மற்றும் இரகசியத் தகவல்கள் தமக்குக் கிடைத்தன" எனவும் அவர் கூறியுள்ளார். (அ)

## இந்திய பொருளாதார மண்டலத்தை அண்மித்துள்ள சீன ஆய்வுக் கப்பல்!

கொழும்பு, செப். 23

சீனாவின் ஷி யான் 6 ஆய்வுக் கப்பல் தற்போது இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்கு அருகில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு வருவதாக சர்வதேச கப்பல் தரவுகள் தெரிவிக்கின்றன.

அந்த தரவுகளுக்கு அமைய நேற்று முதல் குறித்த சீன கப்பல் இந்தியாவுக்கு சொந்தமான நிக்கோபார் தீவுகளுக்கு அருகில், மிகக் குறைந்த வேகத்தில் பயணிக்கிறது.

மலாக்கா ஜலசந்தி வழியாக இந்தியப் பெருங்கடலுக்குள் நேற்று முன் தினம் காலை நுழைந்த ஷி யான் 6 கப்பலை நிக்கோபார் தீவுகள் அருகே அவதானிக்க முடிந்தது.

இலங்கை நோக்கி நேற்று முன் தினம் பகல் வந்த கப்பல், நேற்று முன் தினம் மாலை வங்காள விரிகுடாவை நோக்கி திரும்பி, நிக்கோபார் தீவுகளுக்கு உரிமம் கோருகின்ற இந்தியாவுக்கு சொந்தமான பிரத்தியேக பொருளாதார மண்டலத்தின் கடல் எல்லையை அண்மித்து தமது பயணத்தை மெதுவாக முன்னெடுத்தது.

இவர்களின் புதிய பாதையை அவதானிக்கும்போது, நைன்ரி ஈஸ்ட் றிட்ச் எனப்படும் கடலின் அடிவாரத்திலுள்ள மலைத்தொடரின் மேற்பரப்பில் பயணிக்கின்றமை தெரிகிறது.

இதற்கு முன்னர் வந்த,யுவான் வோங் 5 கப்பல் ஊடாகவும் சீனா கடந்த மூன்று ஆண்டுகளில், யென் ஹொங் எனும் செயற்கைக்கோள் கண்காணிப்பு கப்பலையும் பயன்படுத்தி குறித்த பகுதிகளில் ஆய்வுகளை நடத்தியது.

இதனிடையே, கடந்த இரண்டு தசாப்தங்களில், இந்தியாவும் அமெரிக்காவும் கடலுக்குள் உள்ள மலைகளைப் பற்றி பல ஆய்வுகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பட்ஜெட்டை எதிர்க்கவுள்ள பெரமுனவின் எம்.பிக்கள்!

கொழும்பு, செப். 23

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் முன்னர் தமது அணிக்கு அமைச்சுப் பதவிகள் கிடைக்கவில்லை என்றால், வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிப்பதில்லை என பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கலந்துரையாடியுள்ளதாக தெரியவருகிறது.

நுவரெலியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரது வீட்டில் அண்மையில் இது சம்பந்தமான விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் தொடர்ந்தும் பசில் ராஜபக்ஷவுக்கு அறிவுறுத்துவதில் பலனில்லை எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதனால், இது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெளிவுப்படுத்தி பிரச்னைக்கு தீர்வு காண சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

எது எப்படி இருந்தபோதிலும் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியில் புதிதாக அமைச்சர்களை நியமிப்பதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானத்துள்ளதாக பேசப்படுகிறது. (அ)

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உயர்தர பரீட்சார்த்திகள் முறைப்பாடு!

கொழும்பு, செப். 23

2023 ஆம் ஆண்டுக்காக இடம்பெறவுள்ள கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் சிலர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளனர்.

அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் வரையில் கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சையை பிற்போட்டு தங்களது கற்றல் நடவடிக்கைக்கு போதுமான காலத்தை பெற்றுதருமாறு கோரி அவர்கள் இந்த முறைப்பாட்டை முன்வைத்துள்ளனர்.

எவ்வாறாயினும் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 2023ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை, பிற்போடப் பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (அ)

## இலங்கைப் போக்குவரத்து அமைச்சு இந்தியாவுடன் புதிய உடன்படிக்கை!

கொழும்பு, செப். 23

இலங்கையின் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, இந்தியாவின் ஐகொன் இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனத்துடன் உடன்படிக்கை ஒன்றை செய்துள்ளது.

மஹவ முதல் அனுராதபுரம் வரையிலான 66 கிலோ மீற்றர் பாதைக்கு சமிக்ஞை விளக்கு அமைப்பை வடிவமைத்தல், நிறுவுதல், சோதனை செய்தல் என்ற அடிப்படையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

14.9 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இந்த ஒப்பந்தம் இலங்கையின் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே ஆகியோர் முன்னிலையில் கையெழுத்தானது.

இதன்போது கருத்துரைத்த இந்திய தூதுவர் கோபால் பாக்லே, இலங்கை மக்களின் போக்குவரத்தை இலகுவாக்கும் வகையில், இந்தியா தொடருந்து வேலைத்திட்டங்களில் தமது ஆதரவை வழங்கும் என குறிப்பிட்டார். (அ)

## கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்ட நபர் பலி!

கொழும்பு, செப். 23

இரத்தினபுரி குருவிட்ட கோக்ஹோவிட்ட பிரதேசத்தில் வீடொன்றில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட நிலையில் மற்றுமொரு வீட்டில் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டு தாக்கப்பட்ட ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டுக்கு தடுத்து வைக்கப்பட்ட ஒருவர் தாக்கப்படுவதாக கிடைத்த தகவலை அடுத்து விசாரணைகளை நடத்திய பொலிஸார், தாக்குதலுக்கு உள்ளான நபர், அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த வீட்டுக்கு அருகில் உள்ள காட்டில் போடப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று மாலை உயிரிழந்துள்ளார்.

கோக்ஹோவிட்ட பரக்கடுவ பிரதேசத்தை சேர்ந்த 32 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




## ஒருநாள் உலகக்கிண்ண தொடர் தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

ஜொகன்னர்ஸ்பேர்க், செப். 23

ஒருநாள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி வரும் ஒக்ரோபர் 5ஆம் திகதி இந்தியாவில் தொடங்கு கிறது. இந்த தொடருக்கான 15 பேர் கொண்ட தென்னா பிரிக்க அணி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதில் வேகப்பந்து வீச்சாளர்களான அன்ரிச் நோர்ட்ஜே, சிசண்டா மகலா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இந்நிலையில் அன்ரிச் நோர்க்கியா முதுகு வலி காரண மாகவும், சிசண்டா மகலா இடது முழங்கால் பிரச்னை காரணமாகவும் விலகி உள்ளனர்.

இவர்களுக்கு பதிலாக சகலதுறை வீரரான அன்டில் பெலுக்வயோ, வேகப்பந்து வீச்சாளர் லிஸாத் வில்லி யம்ஸ் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். உலகக் கோப்பை தொடரில் தென்னாபிரிக்க அணி தனது முதல் போட்டியில் ஒக்ரோபர் 7ஆம் திகதி இலங்கை யுடன் மோதுகிறது.

அணி விவரம்: தெம்பா பவுமா (அணித் தலைவர்), ஜெரால்ட் கோட்ஸி, குயின்ரன் டி கொக், ரீஸா ஹெண்ட்ரிக்ஸ், மார்கோ யான்சன், ஹெய்ன்ரிச் கிளா சன், கேசவ் மகாராஜ், அய்டன் மார்க்ரம், டேவிட் மில்லர், லுங்கி நிகிடி, அன்டில் பெலுக்வயோ, காகிசோ ரபடா, தப்ரைஸ் ஷம்சி, ராஸி வான் டெர் டஸ்ஸன், லிஸாத் வில்லியம்ஸ்.

## பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் குழுவிலிருந்து முகமது ஹபீஸ் விலகல்!




லாகூர், செப். 23

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தொழில்நுட்பக் குழுவில் முன்னாள் வீரர் முகமது ஹபீஸ் இடம்பெற்றி ருந்தார். 2 மாதங்களுக்கு முன்பு இந்தப் பொறுப்பில் அவர் நியமிக்கப்பட்டார். முன்னாள் அணித் தலைவர் கள் இன்சமாம்-உல்-ஹக், மிஸ்பா-உல்-ஹக் ஆகியோ ரையும் கொண்ட இக்குழு அணியின் முன்னேற்றத் திற்காக ஆலோசனைகளை வழங்கும்.

இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் தொழில் நுட்பக் குழுவில் இருந்து விலகுவதாக முகமது ஹபீஸ் திடீரென்று அறிவித்தார். இது தொடர்பாக அவர் தனது எகஸ் தளத்தில் இட்ட பதிவில்,

பாகிஸ்தான் கிரிக்கெட் தொழில்நுட்பக் குழுவில் இருந்து விலக முடிவு செய்துள்ளேன். எனக்கு இந்த வாய்ப்பை வழங்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கான எனது நேர்மையான ஆலோசனைகள் தேவைப்படும் போதெல்லாம் நான் எப்போதும் அளிப்பேன். எப்போதும்போல் பாகிஸ் தான் கிரிக்கெட்டுக்கு எனது வாழ்த்துக்கள் என்று கூறியுள்ளார். ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் பாகிஸ்தான் அணியின் செயல் திறனை மதிப்பீடுவதற் காக நேற்றுமுன்தினம் நடந்த கிரிக்கெட் சபை ஆலோ சனை கூட்டத்தில் முகமது ஹபீசும் கலந்து கொண் டார். இதில் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர், அணித் தலைவர் பாபர் அஸாம், உப அணித் தலைவர் ஷதாப் கான் மற்றும் மிஸ்பா-உல்-ஹஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒருநாள் உலகக் கிண்ணம் பாகிஸ்தான் அணி அறிவிப்பு

லாகூர், செப். 23

எதிர்வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான பாகிஸ் தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. பாபர் அஸாம் தலைமையிலான பாகிஸ்தான் அணியில் இளம் வேகப்பந்து வீச்சாளர் நசீம் ஷா காயத்தால் இடம்பிடிக்கவில்லை

சர்வதேச கிரிக்கெட்டில் அசத் திய முன்னாள் வீரர்கள் இந்தியா வில் நடைபெறும் இந்தத் தொடரை வெல்லும் வாய்ப்புள்ள அணிகளில் ஒன்றாக பாகிஸ்தான் அணியை சுட்டிக்காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. அண்மையில் முடிந்த ஆசிய கிண்ணத் தொடரில் மோசமான தோல்விக்குப் பிறகு அந்த அணி உலகக் கிண்ணத் தொடரில் மீண்டு வந்து எழுச்சி காணும் என எதிர்பார்க்கப்படு கிறது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 தொடர் ஒக்ரோபர் 5ஆம் திகதி முதல் நவம்பர் 19ஆம் திகதி



வரை இந்தியாவில் உள்ள 10 நகரங் களில் நடைபெறவுள்ளது. தொடரை இந்தியா நடத்துகிறது. இந்தத் தொடரில் இலங்கை, இந்தியா, நடப்பு சம்பியன் இங்கி லாந்து, அவுஸ்திரேலியா, பாகிஸ் தான், தென்னாபிரிக்கா, நியூசி லாந்து, பங்களாதேஷ், ஆப்கானிஸ் தான், நெதர்லாந்து ஆகிய 10 நாடு கள் பங்கேற்கின்றன.

**பாகிஸ்தான் அணி:**
பாபர் அஸாம் (அணித் தலை வர்), ஷதாப் கான், பகார் ஷமான், இமாம்-உல்-ஹக், அப்துல்லா ஷ பீக், முகமது ரிஸ்வான், சவுத் ஷகீல், இப்திகார் அகமது, சல்மான் அலி ஆகா, முகமது நவாஸ், உசாமா மிர், ஹாரிஸ் ரவூஃப், ஹசன் அலி, ஷாஹின் ஷா அப்ரிடி, முகமது வாசிம்.

# ஆசிய விளையாட்டு போட்டி; இலங்கை அரையிறுதிக்கு தகுதி

கொழும்பு, செப். 23

ஆசிய விளையாட்டு சீனாவில் இன்று சனிக்கிழமை தொடங்கவுள்ள நிலையில் கிரிக்கெட், உதைபந்தாட் டம், கைப்பந்து உள்ளிட்ட சில போட்டிகள் முன்னதாக நடந்து வருகிறது.

20 ஓவர் போட்டியாக நடக்கும் கிரிக்கெட்டில் பெண்கள் பிரிவில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெற்றன. நேற்று நடந்த 3ஆவது காலிறுதி ஆட்டத்தில் இலங்கை - தாய்லாந்து அணிகள் மோதின. மழை காரணமாக ஆட்டம் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. மழை நின்றதும் போட்டி 15 ஓவர் களாக குறைக்கப்பட்டு தொடங்கியது. நாணயச் சுழற்சி யில் ஜெயித்த தாய்லாந்து துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

அந்த அணி விக்கெட்களை இழந்து திணறியது. தாய் லாந்து அணி 15 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 78 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக சுத்திருவாங் 31 ஓட்டங்கள் எடுத்தார்.

இலங்கை தரப்பில் இனோஷி பிரியதர்ஷினி 4 விக் கெட்டும் அத்தப்பத்து, தில்ஹாரி, சுகந்திகா குமாரி தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.



79 ஓட்டங்கள் இலக்குடன் இலங்கை அணி விளை யாடியது. தொடக்க வீராங்கனைகளாக களம் இறங்கிய அணித் தலைவர் அத்தப்பத்து 27 ஓட்டங்களிலும், அனஷ்கா சஞ்சீவனி 32 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்த னர். இலங்கை அணி 10.5 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 84 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

# தோல்வியற்ற ஆயிரமாவது போட்டியில் ஆடினார் ரொனால்டோ!




ரியாத், செப். 23

போர்த்துக்கல் உதைபந் தாட்ட நட்சத்திரமான கிறிஸ் ரியானோ ரொனால்டோ, தனது உதைபந்தாட்ட வாழ்க் கையில், தோல்வியற்ற 1,000 ஆவது போட்டியில் விளை யாடி புதிய சாதனை படைத் துள்ளார்.

சவூதி அரேபியாவின் அல் நாசர் கழகத்துக்காக விளை யாடி வரும் ரொனால்டோ, ஈரானில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பெர்சேபோலிஸ் கழகத்துடனான போட்டியின் போது இந்த மைல்கல்லை அடைந்தார்.

சவூதியின் அல் நாசர் கழகத்துக்கும், ஈரானின் பெர்சேபோலிஸ் கழகத்துக் கும் இடையிலான ஏ. எவ் .சி சம்பியன்ஸ் லீக் போட்டி தெஹ்ரான் நகரிலுள்ள அஸாதி அரங்கில் செவ் வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தப் போட்டியில் 2-0 கோல்கள் விகிதத்தில் அல் நாசர் கழகம் வென்றது. இப் போட்டியில் ரொனால்டோ 90 நிமிடங்கள் விளையாடி னார். எனினும் அவர் கோல் எதுவும் அடிக்கவில்லை. அல் நாசர் சார்பில் அப்துல்ரஹ் மான் காரீப், மொஹம்மத் காசிம் ஆகியோர் கோல் அடித்தனர்.

எனினும், இந்தப் போட்டி யில் அல் நாசர் கழகம் வென்ற தன் மூலம், ரொனால்டோ பங்குபற்றி தோல்வியடையாத சர்வதேச போட்டிகள் மற்றும் கழக மட்டத்திலான போட்டி களின் மொத்த எண்ணிக்கை 1,000 ஆகியது. இந்த 1000 போட்டிகளில் 776 போட்டிக ளில் ரொனால்டோவின் அணி வெற்றியீட்டியுள்ளது. 224 போட்டிகள் வெற்றி - தோல்வியின்றி முடிவுற்றுள் ளன.


# அந்தாட்டிக்காவில் அதிவேகமாக உருகும் பனி: பூமி ரேடியேட்டராக மாறப் போகிறதா?

அண்டார்டிகாவைச் சுற்றியுள்ள கடல் பகுதியில் இருக்கும் பனி, இதற்கு முந்தைய குளிர் காலத்தில் இருந்ததை விட மிகவும் குறைவாக உள்ளது என்பதை செயற்கைக்கோள் படம் காட்டுகிறது. ஒரு காலத்தில் புவி வெப்பமடைதலைத் தடுக்கும் விதத்தில் இருந்த ஒரு பகுதி குறித்த கவலையளிக்கும் தகவலாக இது பார்க்கப்படுகிறது.

‘இது இதுவரை நாம் பார்த்த எந்த ஒரு தரவையும் விட மோசமான தரவாக உள்ளது. உண்மையில் இது பெரும் கவலையளிக்கும் தரவாகவே பார்க்கப்படுகிறது,” என அமெரிக்காவின் கொலராடோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பனி மற்றும் அது குறித்த தரவு மையத்துடன் கடல் பனியை கண்காணிக்கும் வால்டர் மெயர் கூறுகிறார்.

ஒரு நிலையற்ற அண்டார்டிகா பனிக்கண்டம், நீண்ட கால அடிப்படையில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் ஆபத்து அதிகரித்திருப்பதாக துருவப் பகுதிகள் குறித்து ஆய்வு செய்யும் நிபுணர்கள் எச்சரிக் கின்றனர்.

அண்டார்டிகாவின் மிகப்பெரிய பனிக்கட்டி, பூமியின் வெப்பநிலையை ஒழுங்குபடுத்தி வருகிறது. ஏனெனில் அதில் உள்ள வெண்மையான மேற்பரப்பு சூரியனின் ஆற்றலை மீண்டும் வளிமண்டலத்திற்குப் பிரதிபலிக்கிறது என்பதுடன் அதன் கீழும், அருகிலும் உள்ள தண்ணீரை குளிர்வித்துக்கொண்டிருக்கிறது.




அண்டார்டிகா கண்டத்தில் உள்ள பனி, பூமியைக் குளிர்விக்க முடியாமல் போனால், அக்கண்டம் பூமியின் குளிர்சாதன பெட்டி என்ற நிலையில் இருந்து மாற்றமடைந்து, பூமியின் ரேடியேட்டராக மாறக்கூடும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

அண்டார்டிக் பெருங்கடலின் மேற்பரப்பில் மிதக்கும் பனிக்கட்டி இப்போது 17 மில்லியன் சதுர கிலோமீட்டருக்கும் குறைவாகவே உள்ளது. அதாவது செப்டம்பர் மாத சராசரியை விட 1.5 மில்லியன் சதுர கிலோமீட்டர் பனி குறைவாக உள்ளது. மேலும் முந்தைய குளிர்காலத்திலேயே மிகவும் குறைந்த அளவு இருந்தாலும், அதைவிட தற்போது குறைவாக உள்ளது.

இது பிரிட்டிஷ் தீவுகளை விட ஐந்து மடங்கு பெரிய பனிக்கட்டியின் ஒரு பகுதி என்பது கவனிக்கத்தக்கது.


இது போன்ற சூழ்நிலையில், ஏற்கெனவே உருகி தண்ணீராக மாறிவிட்ட பனி கணிசமான அளவிற்கு மீண்டும் உருவாகும் என்று டாக்டர் வால்டர் மெயர் நம்பத் தயாராக இல்லை.

இந்த ஆண்டு கடல்-பனி இந்த அளவுக்குக் குறைந்ததற்கான அனைத்து காரணிகளையும் அடையாளம் காண ஆய்வாளர்கள் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் அண்டார்டிகா பகுதியில் என்ன நடந்து வருகிறது என்பதையும், அதன் போக்குகளையும் தெரிந்துகொள்வது வரலாற்று ரீதியாக சவால் மிக்க ஒன்றாக இருக்கிறது.

ஓராண்டில் உலக அளவில் பரவியிருக்கும் வெப்பம் குறித்து இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள தரவுகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டுள்ள நிலையில், கடல் பனி குறித்து மிகுந்த கவனம் செலுத்தவேண்டியது அவசியம் என சில விஞ்ஞானிகள் வலியுறுத்துகின்றனர்.

அண்டார்டிக் தீபகற்பத்தில் தொடர்ந்து ஆராய்ச்சி செய்துவரும், மனிடோபா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ராபி மாலெட் கூறுகையில், “இது எவ்வளவு எளிதாகப் பாதிக்கப்படக்கூடியதாக இருக்கிறது என்பது நன்றாகத் தெரிகிறது,” என்றார்.

ஏற்கெனவே ஒரு குழுவுடன் அன்டார்டிகாவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இப்படி பனி உருகி, குழுவினருடன் அவர் தங்கியிருக்கும் பகுதி மிகவும் இலேசாக மாறியுள்ளது என்றும், இதனால் அவர் வசிக்கும் பகுதி அக்குழுவினருடன் சேர்ந்து கடலில் மூழ்கிவிடும் ஆபத்து இருப்பதாகவும் அவர் கூறுகிறார். இது அவரது குழுவின் பணியை மேலும் கடினமாக்கியுள்ளது. “அந்த பனிப்பகுதி உடைந்து எங்களுடன் கடலுக்குச் செல்லும் அபாயம் உள்ளது,” என்று டாக்டர் மாலெட் கூறினார்.




கோடையில் பெருமளவில் அண்டார்டிகா கண்டத்தின் பனி உருகும் முன் அங்கு நிலவும் குளிர்காலத்தில் (மார்ச் முதல் அக்டோபர் மாதம் வரை) கடல்-பனி உருவாகிறது. மேலும் இது ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட அமைப்பின் ஒரு பகுதியாக மாறுகிறது. இது பனிப்பாறைகள், நிலப் பனி மற்றும் பெரிய பனிக் கட்டிகளையும் கொண்டுள்ளது - கடற்கரையிலிருந்து வெளியேறும் நிலப் பனிக்கட்டிகள் பின்னர் தண்ணீரில் மிதக்கும் பனிக்கட்டிகளாக மாறுகின்றன.

கடல்-பனி நிலத்தை மூடியிருக்கும் பனிக்கட்டிக்கு ஒரு பாதுகாப்பு உறைபோலச் செயல்படுகிறது என்பதுடன், கடல் வெப்பமடைவதைத் தடுக்கிறது.



பிரிட்டிஷ் அண்டார்டிக் ஆய்வு அமைப்பைச் சேர்ந்த டாக்டர் கரோலின் ஹோம்ஸ், கடல்-பனி சுருங்கி வருவதால் ஏற்படும் பாதிப்புகள் கோடைகாலம் வரும்போது தெளிவாகத் தெரியலாம் என்றும், அப்போது பனி உருகுவதைத் தடுக்க முடியாததற்கான காரணம் குறித்து மேலும் பல தகவல்கள் கிடைக்கும் என்றும் கூறினார்.

மேலும் கடல்-பனி மறைந்துவிடுவதால், அது கடலின் இருண்ட பகுதிகளை வெளிக்காட்டுகிறது. இது சூரிய ஒளியை பிரதிபலிப்பதற்கு மாறாக அதை உறிஞ்சுகிறது. அதாவது வெப்ப ஆற்றல் தண்ணீரில் சேர்க்கப்படுகிறது. இது மேலும் அதிக பனியை உருகச் செய்கிறது. விஞ்ஞானிகள் இதை பனி-ஆல்பிடோ விளைவு என்று அழைக்கிறார்கள்.

இது பூமியை அதிக வெப்பமடையச் செய்யலாம். இதன் விளைவாக, உலகளாவிய வெப்பநிலையை ஒழுங்குபடுத்திவரும் அண்டார்டிகாவின் வழக்கமான செயல்கள் சீர்குலையும்.

“உறங்கிக்கொண்டிருக்கும் அண்டார்டிகா என்ற ராட்சசனை நாம் எழுப்புகிறோமா?” என்று எக்ஸிடெர் பல்கலைக்கழகத்தின் பனிப்பாறை நிபுணர் பேராசிரியர் மார்ட்டின் சீகெர்ட் கேள்வி எழுப்புகிறார். இது “உலகிற்கு ஒரு முழுமையான பேரழிவாக இருக்கும்,” என்று அவர் கூறுகிறார்.

அண்டார்டிகாவின் பனிக்கட்டிகளில் என்ன மாற்றங்கள் ஏற்படும் என ஏற்கனவே உலகம் அச்சத்துடன் உற்று நோக்கிவருகிறது என்றும், இந்த மோசமான சூழ்நிலை இனி, மேலும் மோசமாகும் என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன என்றும் லீட்ஸ் பல்கலைக்கழகத்தின் புவியியல் விஞ்ஞானி பேராசிரியர் அன்னா ஹாக் கூறுகிறார்.

1990 களில் தொடங்கி, அண்டார்டிகாவில் இதுவரை பனிக்கட்டிகள் உருகியதால் கடல் மட்டம் 7.2 மில்லிமீட்டர் உயர்ந்துள்ளது.

கடல் மட்டங்களில் மிதமான அதிகரிப்புகள் கூட, கடலோர சமூகங்களை அழிக்கக்கூடிய அபாயகரமான, அதி உயர அலைகளை உருவாக்கும். கணிசமான அளவு நிலப் பனி உருகத் தொடங்கினால், உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களுக்கு அதன் தாக்கங்கள் பேரழிவை ஏற்படுத்தும்.

நீரால் சூழப்பட்ட ஒரு தனிப் பனிக்கண்டமாக விளங்கும் அண்டார்டிகா, அதற்கென்று தனியான வானிலை மற்றும் காலநிலை அமைப்பைக் கொண்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு வரை அண்டார்டிகாவின் குளிர்கால கடல்-பனி உண்மையில் வளர்ந்து வந்தது.

ஆனால் மார்ச் 2022 இல் கிழக்கு அண்டார்டிகாவை ஒரு தீவிர வெப்ப அலை தாக்கியது. இதனால், வெப்பநிலை -50 சி அருகில் இருக்க வேண்டும் என்ற நிலையைக் கடந்து, -10 சி வரை அதிகரித்தது.

‘30 ஆண்டுகளுக்கு முன்பு நான் அண்டார்டிகாவைப் பற்றி ஆய்வு செய்யத் தொடங்கிய போது, அங்கு தீவிர வானிலை மாற்ற நிகழ்வுகள் நடக்கலாம் என்று நாங்கள் நினைக்கவே இல்லை,” என்கிறார் பேராசிரியர் சீகெர்ட்.

இந்த ஆண்டு உள்பட கடந்த ஏழு ஆண்டுகளில் மூன்று ஆண்டுகளின் போது கடல்-பனி கோடையில் வரலாறு காணாத அளவுக்கு உருகியது.



சில விஞ்ஞானிகள் இந்த அளவுக்கு பனிக் கட்டிகள் உருகுவது, அக் கண்டத்தில் ஒரு அடிப்படை மாற்றம் நிகழும் என்பதைக் குறிக்கலாம் என்று நம்புகிறார்கள் - இது அந்த பிராந்தியத்தின் தனித்துவத்தை மாற்றியமைக்கும் என்றும் அஞ்சப்படுகிறது.

அண்டார்டிகா பற்றிய வரலாற்றுத் தகவல்களைப் போதுமான அளவுக்கு அறிந்துகொள்வதில், அதன் தொலைவு பெரிய தடைக்கல்லாக இருக்கிறது.

டாக்டர் ராபி மாலெட்டின் கூற்றுப்படி, அறிவியல் அடிப்படையில் இப்பகுதி இன்னும் யாரும் எளிதில் அடையமுடியாத பகுதியாகவே இருக்கிறது.

கடல்-பனி உருகி எவ்வளவு தூரம் பரவுகிறது என்பது விஞ்ஞானிகளுக்குத் தெரியும். ஆனால், அது எவ்வளவு தடிமனாக இருக்கிறது என்பது தெரியாது. அந்தப் பனி உருகி அதன் தடிமன் வெளியாகும் போது, அந்த பிராந்தியத்திற்கான காலநிலையை தீவிரமாக மாற்றும்.

அண்டார்டிகாவில் அறிவியல் ஆராய்ச்சிகள் நடைபெறும் தளமான ரோதெராவில், டிஃபையன்ட் எனப்படும் சர்வதேச ஆராய்ச்சி திட்டத்திற்காக டாக்டர் மாலெட் கடல்-பனியின் தடிமன் குறித்து ஆய்வு செய்ய ரேடார் கருவிகளைப் பயன்படுத்திவருகிறார்.

அவரும் மற்ற ஆய்வாளர்களும் இன்னும் குளிர்கால பனியின் அளவு தொடர்ந்து குறைந்து வருவதற்கான காரணங்களைக் கண்டுபிடிக்க முயற்சித்து வருகின்றனர்.

“இது இயற்கையான மாறுபாடுகளின் மிகவும் விசித்திரமான வெளிப்பாடாக இருக்க வாய்ப்பு உள்ளது,” என்று அவர் கூறுகிறார், அதாவது ஏராளமான இயற்கை காரணிகள் ஒரே நேரத்தில் உருவாகி அந்தப் பிராந்தியத்தைப் பாதிக்கின்றன.

இந்த ஆண்டு வரலாற்றில் இல்லாத அளவுக்கு சூடான பெருங்கடல்களின் நீரோட்டங்கள் இது போல் பனி உருகுவதற்கு ஒரு காரணியாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் பரிந்துரைக்கின்றனர் - கடல் நீர் சூடாக இருப்பதால் அதன் உறையும் தன்மை குறைந்திருக்கும்.

மேலும் கடல் நீரோட்டங்கள் மற்றும் காற்றின் சுழற்சி அண்டார்டிக் பனிக்கண்டத்தின் வெப்பநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் நிலையும் இருக்கிறது.

தற்போது பசிபிக் பகுதியில் உருவாகி வரும் எல்நினோ வானிலை நிகழ்வு, அது பலவீனமாக இருந்தாலும், கடல்-பனியை உருக்கும் ஆபத்துகள் இருக்கின்றன.

“கவலைப்படுவதற்கு மிகவும் பெரிய காரணங்கள்” இருப்பதாக டாக்டர் மாலெட் கூறுகிறார்.

“அண்டார்டிகாவில் கடந்த 40 ஆண்டுகளாக இல்லாத காலநிலை மாற்றம் தற்போது மிகவும் ஆபத்தான அறிகுறியாக இருக்கிறது என்பதே உண்மை. இப்போது தான் அங்கு காலநிலை மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது.”

# இந்தியா - கனடா பதற்றம்: இஸ்ரேல் போல 'றோ' செயல்பட்டதா?

இந்தியாவுக்கும் கனடாவிற்கும் இடையிலான பரஸ்பர கசப்பு இப்போது வெட்டவெளிச்சமாகிவிட்டது.

சீக்கியத் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜரின் கொலைக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ முதலில் குற்றம் சாட்டினார். அதன் பின்னர் இரு நாடுகளும் ஒன்று மற்றதன் தூதரக அதிகாரிகளை நாட்டிலிருந்து வெளியேற்றின.

இந்தியா-கனடா உறவில் கசப்பு அதிகரித்து வரும் நிலையில் செவ்வாய்க்கிழமை இரவு ஜஸ்டின் ட்ரூடோ, “இந்திய அரசு இந்த விஷயத்தில் தீவிரம் காட்ட வேண்டும். நாங்கள் யாரையும் தூண்டிவிட விரும்பவில்லை,” என்றார்.

**ஜஸ்டின் ட்ரூடோ விரும்புவது என்ன?**

எந்தவொரு வளர்ந்த நாடும் அல்லது ஜி7 நாடுகளும் இதற்கு முன் இந்தியா மீது இதுபோன்ற கடுமையான குற்றச்சாட்டுகளை பகிரங்கமாக முன்வைத்ததில்லை என்பதால் இந்தக் கேள்வி முக்கியமானதாகிறது.

கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் பியர் பொலிவியேரும் இந்தக் குற்றச்சாட்டு குறித்து ட்ரூடோவிடம் கூடுதல் தகவல்களைக் கேட்டுள்ளார். பிரதமர் இதுவரை எந்த ஆதாரங்களையும் வழங்கவில்லை. மேலும் உண்மைகளை நாம் பார்க்க வேண்டிய அவசியம் உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

ட்ரூடோ இப்படி ஒரு நடவடிக்கை எடுத்ததன் அர்த்தம் என்ன என்பதை இப்போது நாம் புரிந்துகொள்ள முயல்வோம். இந்தியா-கனடா உறவுகளில் ஏற்பட்டுள்ள விரிசலை இந்திய மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் எவ்வாறு பார்க்கின்றன என்பதையும் அறிந்துகொள்வோம்.

**ட்ரூடோவின் நோக்கம்**

‘தி இந்து’ நாளிதழில் இந்தியா-கனடா உறவுகள் குறித்த தலையங்கம் வெளியிடப்பட்டுள்ளது.

ட்ரூடோவின் கருத்துகள் இந்தியா-கனடா உறவை மோசமாக்கியுள்ளன என்று தலையங்கம் கூறுகிறது. கனடாவுடன் உளவுத்துறை பகிர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள ‘பைவ் ஐஸ்” குழுவின் உறுப்பு நாடுகளான அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவும் இதுகுறித்து கவலை தெரிவித்துள்ளன.

இந்தியா குறித்த ட்ரூடோவின் கருத்துகளுக்கு கனடிய நாடாளுமன்றத்தில் அவரது அரசியல் எதிரிகளின் ஆதரவும் கிடைத்தது. 2025 தேர்தலில் இந்த அரசு ஆட்சியில் இருந்து வெளியேறினால், இந்த விவகாரம் கிடப்பில் போடப்படும் வாய்ப்பும் உள்ளது.

பாகிஸ்தானை பொருத்தமட்டில், இதுபோன்ற குற்றச்சாட்டுகளை முன்வைப்பதும், பொதுவெளியில் நேருக்கு நேர் மோதுவதும் சகஜம். ஆனால் இங்கு நாம் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பலர் வசிக்கும், நேட்டோ உறுப்பு நாடான கனடாவை பற்றிப் பேசுகிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தகராறு அதிகரித்தால் அது பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.



இப்படிப்பட்ட இக்கட்டான தருணத்தில் அடுத்தக் கட்ட நடவடிக்கைகளை சிந்தித்து எடுக்க வேண்டும் என்று தி இந்துவின் தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு எதிரான கடுமையான குற்றச்சாட்டுகளை பகிரங்கமாக நிரூபிப்பது அல்லது அதைச் செய்வதில் தோல்வி அடைந்ததாக ஏற்றுக்கொள்வதுதான் ட்ரூடோவின் முன்னுரிமையாக இருக்கும்.

இந்தியாவுக்கு எதிரான பிரிவினைவாத காலிஸ்தானி குழுக்களின் நடவடிக்கைகளுக்கு கனடாவின் நிலம் பயன்படுத்தப்படுவதாக இந்தியா கூறி வருகிறது. இது பலமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. இது 1980களில் தொடங்கி இந்திய தூதர்கள் மற்றும் இந்திய சமூக மையங்கள் மீதான தாக்குதல்களுடன் சமீப காலம் வரை தொடர்கிறது.

ஹர்தீப் சிங் நிஜ்ஜார் காலிஸ்தான் புலிப்படையின் தலைவராக இருந்தார். அவர் இந்தியாவில் தேடப்பட்டு வந்தார். 1990களில் பஞ்சாபில் நடந்த தீவிரவாத நடவடிக்கைகளின் பின்னணியில் நிஜ்ஜார் இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டது. நிஜ்ஜோர் மீது இன்டர்போல், ரெட்



கார்னர் நோட்டீஸ் வெளியிடப்பட்டது. அவர் கனடாவின் குடியுரிமை பெற்றவர்.

கனடாவுடனான தனது உறவை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பதை இப்போது இந்தியாதான் முடிவு செய்யவேண்டும். 1973ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன் முறையாக 2015ஆம் ஆண்டில்தான் இந்தியப் பிரதமர் இருதரப்புப் பயணமாக கனடா சென்றார். பிரதமர் மோடிக்கு முன்னதாக முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கும் ஜி-20 மாநாட்டில் கலந்து கொள்ள ஒருமுறை கனடா சென்றிருந்தார்.

ஜி-20 மாநாட்டில் பிரதமர் மோடிக்கும், ஜஸ்டின் ட்ரூடோவுக்கும் இடையிலான சந்திப்பு சுமூகமாக இருக்கவில்லை. இதைத் தொடர்ந்து, சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை கனடா உடனடியாக நிறுத்தியது.



இவ்வாறான நிலையில் ட்ரூடோவின் அறிக்கையால் இரு நாடுகளுக்கும் இடையிலான தூதாண்மை உறவுகள் ஸ்தம்பித்துள்ளன.

**பிரிவினைவாதிகள் தொடர்பாக கனடாவின் அதிர்ச்சிகரமான கூற்று: தி நியூயார்க் டைம்ஸ்**

இந்தியா-கனடா உறவு மோசமடைந்திருப்பது குறித்து நியூயார்க் டைம்ஸ் நீண்ட செய்தி வெளியிட்டுள்ளது.

கனடாவின் குற்றச்சாட்டுகள் பீரங்கி குண்டுகள் போன்றவை என இந்த அறிக்கையில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு சவால் விடுக்க தன்னுடன் ஒன்றிணையுமாறு, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நட்பு நாடுகளை கனடா கேட்டுக்கொண்டுள்ளது. அதேநேரம் மேற்கத்திய நாடுகள் குறிப்பாக கனடா, இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் சீக்கிய பிரிவினைவாத அமைப்புகளின் புகலிடமாக மாறியுள்ளது.

நிஜ்ஜார் கொலைக்குப் பின்னால் இந்தியாவின் கை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், அது இந்திய பாதுகாப்பு அமைப்புகளுக்கு தர்மசங்கடமான சூழ்நிலையாக இருக்கும் என்று நியூயார்க் டைம்ஸ் எழுதியுள்ளது. இந்தியாவின் புலனாய்வு அமைப்பான ‘ரோ” மீது, மற்ற நாடுகளில் கொலைகளைச் செய்ய சதி செய்ததாகக் கடந்த காலங்களில் ஏற்கெனவே குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஹர்தீப் சிங் நிஜ்ஜார் வழக்கு, மேற்கத்திய நாடுகள் அறிந்துகொள்ளும் விதமாக வெளியான முதல் வழக்கு என்று முன்னாள் பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகின்றனர்.

பஞ்சாபில் மட்டுமே காலிஸ்தான் இயக்கத்திற்கு சிறிதளவு ஆதரவு இருப்பதாக இந்திய அரசு நீண்ட நாட்களாகக் கூறி வருவதாக அந்த செய்தித்தாள் எழுதியுள்ளது. 2020-2021இல் சீக்கிய விவசாயிகள் தலைமையில் விவசாயிகள் போராட்டம் நடந்தபோது, ஆளும் கட்சித் தலைவர்கள் விவசாயிகளை காலிஸ்தானிகள் என்று நிரூபிக்க முயன்றனர் என்பது வேறு விஷயம்.

**பாதுகாப்பு குறித்த கேள்வி**

கனடாவின் குற்றச்சாட்டுகள் தீவிரமானவை என்று தி நியூயார்க் டைம்ஸிடம் பேசிய முன்னாள் இந்திய தூதர் கே.சி.சிங் குறிப்பிட்டார்.

‘நிஜ்ஜார் கொலைக்குப் பிறகு இந்தப் பிரச்னை எழும் என்பது தெளிவாகத் தெரிந்தது” என்றார் அவர். இந்த விவகாரத்தில் சீக்கிய அமைப்புகள் இந்திய தூதரக அதிகாரிகள் மீது குற்றம் சாட்டி, கனடிய தலைவர்களுக்கு அழுத்தம் கொடுத்தனர்.

“கனடாவில் உள்ள காலிஸ்தான் ஆதரவாளர்கள் மீது இந்தியா தொடர்ந்து கோபமாக உள்ளது. அதேநேரம் தனது குடிமக்கள் மற்றும் இறையாண்மை மீது ஆபத்து சூழ்வதாக கனடா கூறுகிறது. இரு நாடுகளுக்கும் இடையிலான தூரம் அதிகரித்துள்ளது,” என்று கே.சி.சிங் கூறினார்.

கடந்த 1980களில் காலிஸ்தான் இயக்கம் வன்முறையாக மாறியது, போராளிகளால் பொற்கோயில் கைப்பற்றப்பட்டது மற்றும் ராணுவ நடவடிக்கை மேற்கொள்ள இந்திரா காந்தி எடுத்த முடிவு போன்றவற்றையும் நியூயார்க் டைம்ஸ் அறிக்கை குறிப்பிடுகிறது.

அதோடு, 1985ஆம் ஆண்டு டொராண்டோவில் இருந்து லண்டன் செல்லும் விமானத்தில் வெடிகுண்டு வைத்ததாக காலிஸ்தானி பிரிவினைவாதிகள் மீதும் குற்றம் சாட்டப்பட்டது. இந்த விபத்தில் 300 பேர் உயிரிழந்தனர்.

உள்நாட்டு அரசியல் காரணமாக இதுபோன்ற அமைப்புகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர். ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவிலும் சீக்கிய சமூகம் வலுப்பெற்று வருகிறது. நிஜ்ஜாரை நாடு திருப்பி அனுப்புமாறு இந்தியா 2018இல் கோரியிருந்தது.

**இந்தியாவின் பொறுப்பு**

வாஷிங்டன் போஸ்ட் நாளேடும், இந்தியா-கனடா குறித்த பகுப்பாய்வு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த ஆய்வில் மிஹிர் ஷர்மா இவ்வாறு எழுதுகிறார்: ‘இந்தியா மீதான ட்ரூடோவின் குற்றச்சாட்டு பல காரணங்களுக்காக அதிர்ச்சியளிக்கிறது. ஒரு காரணம் என்னவென்றால், நாம் நல்லவர்கள், நமது அரசு இதுபோன்ற எதையும் செய்யாது என்று நம்மில் பெரும்பாலானோர் கருதுகின்றனர்.

இந்தியா உண்மையாகவே மேற்கத்திய மண்ணில் அப்படி ஒரு செயலைச் செய்திருந்தால் அது மோதலை மேலும் அதிகரிக்கும். அரசின் கடுமையான அணுகுமுறையை ஆதரிப்பவர்கள்கூட இதை மறுக்க மாட்டார்கள்.

சர்வதேச உறவுகள் விவகாரத்தில் இந்தியாவின் பாரம்பரிய அணுகுமுறையை மாற்ற பிரதமர் மோடி



முயல்தாகத் தெரிகிறது. 2019இல் காஷ்மீரில் நடந்த தாக்குதலுக்குப் பிறகு, ‘வீட்டில் புகுந்து அடிப்போம்’ என்பது போன்ற விஷயங்களும் பிரசாரம் செய்யப்பட்டன.

அண்டை நாட்டில் தஞ்சம் புகுந்திருக்கும் பயங்கரவாதிகளையே பிரதமர் மோடி குறிப்பிட்டார் என்பது அனைவரும் அறிந்ததே. இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் மீது வான்வழித் தாக்குதலும் நடத்தப்பட்டது.

இந்த விஷயத்தில் இந்தியா இஸ்ரேலை போன்ற ஒரு நிலையில் இருக்கும் என்று சிலர் நம்புகிறார்கள். எல்லோரும் இந்திய புலனாய்வு அமைப்புகளை சந்தேகிப்பார்கள். ஆனால் அதை யாராலும் நிரூபிக்க முடியாது.

இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையில் இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டால், அது தூதாண்மை மற்றும் உளவுத்துறையின் தோல்வி என்பது தெளிவாகிறது,” என்று வாஷிங்டன் போஸ்ட் கூறுகிறது.

‘இந்த விவகாரத்தில் பல விஷயங்கள் இன்னும் தெரியவில்லை. இதில் முக்கியமானது என்னவென்றால், கனடாவின் விசாரணை வெளிப்படையாக இருக்க வேண்டும். அதற்கு இந்திய அரசும் ஒத்துழைக்க வேண்டும்.

(16ம் பக்கம் பார்க்க)

# இந்தியா - கனடா பதற்றம்:...

15ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த ஆண்டு பிரதமர் மோடி மீண்டும் தேர்தல் களத்தில் இறங்கும்போது அவரது ஆதரவாளர்கள், 'வலுவடைந்து வரும் இந்தியாவின் பிம்பத்தின் வடிவமாகவே' இந்த விஷயத்தை கருதுவார்கள்.

வேறொரு நாட்டிற்குச் சென்று உங்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பவர்களைக் கொல்லும் சக்தி இருப்பது ஒரு விஷயம். ஆனால் உங்கள் நண்பருக்கு அவமானம் ஏற்படாத வகையிலும், நீங்கள் பேசும் மதிப்புகளுக்கு உகந்த வகையிலும் அதைச் செய்வது மற்றொரு விஷயம்," என்று வாஷிங்டன் போஸ்ட் குறிப்பிட்டுள்ளது.

**இந்தியா-கனடா உறவுகள்**

அமெரிக்காவின் புகழ்பெற்ற பத்திரிக்கையான 'டைம்', இந்தியா-கனடா உறவில் ஏற்பட்டுள்ள விரிசல் குறித்து விரிவான செய்தியை வெளியிட்டுள்ளது.

மேற்கத்திய நாடுகளைப் போல மோடிக்கும் ட்ரூடோவுக்கும் இடையே, முறையான இருதரப்பு பேச்சு வார்த்தைகள் நடைபெறாத நிலையில், ஜி-20 மாநாட்டின்போதே இந்தியா-கனடா உறவில் விரிசல் தொடங்கியது என்று அந்த அறிக்கை கூறுகிறது.

இந்தச் சந்திப்பில் இரு தலைவர்களும் பரஸ்பரம் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தினர்.

அதிக எண்ணிக்கையிலான இந்திய வம்சாவளியினர் வசிக்கும் கனடாவுடனான உறவுகள் கடந்த சில ஆண்டுகளாக பலவீனமடைந்துள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

ட்ரூடோ பிரதமரான பிறகு பிரதமர் மோடி ஒருமுறை கூட கனடா செல்லவில்லை. கனடாவில் இந்து கோவில்கள் மீது தாக்குதல்கள் நடக்கின்றன. 'இந்தியாவின் இறப்பு" மற்றும் 'காலிஸ்தான்" போன்ற விஷயங்கள் உருது மொழியில் அங்கு சுவர்களில் எழுதப்பட்டு வருகின்றன.

கடந்த 2018ஆம் ஆண்டு ட்ரூடோ இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, அவருடன் ஜஸ்பால் அட்வாலும் இருந்ததாக டைம் அறிக்கையில் எழுதப்பட்டுள்ளது.

பஞ்சாப் அமைச்சர் ஒருவரின் கொலை முயற்சி வழக்கில் அட்வால் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டவர். ஆனால் சீனாவுக்கு சவால் விடுவதற்காக இரு நாடுகளும் ஒன்றிணைந்தபோது இந்த விஷயம் பின்னுக்குத் தள்ளப்பட்டது.

இந்த ஆண்டு மே மாதத்திற்குள் இரு நாடுகளும் ஆட்டோமொபைல், விவசாயம், தகவல் மற்றும் தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட இருந்தன. ஆனால் கடந்த வாரம் கனடா இதை நிராகரித்தது.

காலிஸ்தான் பிரச்னையைத் தீர்க்கும் விஷயத்தில் கனடா, வாக்கு வங்கி அரசியலால் தூண்டப்பட்டதாகத் தெரிகிறது என்று ஜூன் மாத தொடக்கத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கூறியதாக டைம் இதழின் அறிக்கை கூறுகிறது.

ஜெய்சங்கர் இதைச் சொன்ன 10 நாட்களுக்குப் பிறகு கனடாவில் உள்ள குருத்வாராவுக்கு வெளியே நிஜ்ஜார் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சமீபத்திய விவகாரம் கனடாவின் உலகளாவிய நிலையின் மீது மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

**ட்ரூடோவுக்கு என்ன வேண்டும்?**

ஜூன் 18ஆம் தேதி நிஜ்ஜார் கொல்லப்பட்டார். அதற்கு மூன்று மாதங்களுக்குப் பிறகு அதாவது செப்டம்பர் 18ஆம் தேதி, ஒரு ஜனநாயக நாட்டின் தலைவர் மற்றொரு ஜனநாயக நாட்டின் மீது இதுபோன்ற குற்றச்சாட்டை முன்வைப்பது அசாதாரண சம்பவம் என்று எகனாமிஸ்ட் தனது செய்தியறிக்கையில் எழுதியுள்ளது.

இந்தியாவின் வலதுசாரி ஊடகங்களும், மோடியின் ஆதரவாளர்களும் அரசின் கருத்தை எதிரொலிப்பதாகவும், ட்ரூடோ பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததாக குற்றம் சாட்டுவதாகவும் அதில் எழுதப்பட்டுள்ளது.

இது பிரதமர் மோடிக்கு சாதகமாக அமையும் என்றும் அரசு ஆதரவாளர்களால் கூறப்படுகிறது.

"இந்திய அரசு கனடாவில் பயங்கரவாதிகளைக் கொன்றதாகக் கூறி மோடியின் 2024 தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கினார் ஜஸ்டின் ட்ரூடோ," என்று வலதுசாரி இணையதள ஆசிரியரின் ட்வீட்டை மேற்கோள் காட்டி எகனாமிஸ்ட் எழுதியுள்ளது.

ஜி-20 உச்சி மாநாட்டின்போது மேற்கத்திய நாடுகளின் தலைவர்களுடன் மோடி நீண்டநேர சந்திப்புகளை நடந்தினார். ஆனால் ட்ரூடோவுடன் உச்சிமாநாட்டின்போது 10 நிமிட சந்திப்பு மட்டுமே நடத்தப்பட்டது.

சீக்கிய பிரிவினைவாதத்தால் இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையே நீண்ட காலமாக கசப்புணர்வு நிலவி வருகிறது. பிரிவினைவாதிகளிடம் கனடா மென்மையாக நடந்து கொள்கிறது என்று இந்தியா குற்றம் சாட்டி வருகிறது. கனடாவும் பிரிவினைவாத தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடாகும். அந்த நாட்டில் நடந்த விமான குண்டுவெடிப்பில் 300க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

'கனடாவின் வரலாற்றில் இது மிகவும் ஆபத்தான பயங்கரவாத தாக்குதல்," என்று அந்த அறிக்கை கூறுகிறது. ஆனால் இது சீக்கியர்களுக்கும் கனடாவின் பிற குடிமக்களுக்கும் இடையே இடைவெளியை உருவாக்கவில்லை. கனடாவில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளிலும் சீக்கியர்கள் உள்ளனர்.

வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் இருந்து லாபம் பெற விரும்புவதால் கனடாவின் முதலீட்டாளர்களுக்கு இந்தியா ஒரு முக்கியமான சந்தை என்று எகனாமிஸ்ட் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் கனடாவை ஆதரிப்பது கடினமாக இருக்கும். இந்த இரு நாடுகளும் சீனாவின் செல்வாக்கை நிறுத்த இந்தியாவின் ஆதரவை விரும்புகின்றன.

அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இதுவரை இந்த விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையுடன் கருத்து தெரிவித்துள்ளன.

இஸ்ரேலை போல தோற்றமளிக்க இந்தியா நினைக்கலாம். ஆனால் உலகில் அது ரஷ்யாவை போல பார்க்கப்படாமல் இருக்கவேண்டும் என்று எகனாமிஸ்ட் எழுதியுள்ளது. ●

